# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**செப்டம்பர் 2002 ஜீவியம் 8 மலர் 5**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- |
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 18 |
| லைப் டிவைன் | 19 |
| அன்பர் கடிதம் | 36 |
| சாவித்ரி | 38 |
| சரணாகதி என்ற முறையின் தத்துவமும், நடைமுறையும் | 40 |
| அபரிமிதமான செல்வம் | 54 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 57 |
| புலன்களுக்குப் புலப்படாதது | 62 |

☆ ☆ ☆

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**
**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**726) சிந்தனை எழுமிடத்து அதைச் சரண் செய்தால் எண்ணம் அழியும். எண்ணத்தின் அமைப்பைக் கண்டு (structure) அதிலிருந்து மன எழுச்சியின் சக்தியை அகற்றினால், அமைப்பு கரையும். அடுத்த நிலையில் அதேபோல் மனம் கரையும்.**

*சிந்தனையை அழித்து, அமைப்பையும் அழித்து, மனத்தை அழிக்க வேண்டும்.*

செயல் ஆசையால் தீவிரப்படுதல்போல் எண்ணம், மன எழுச்சியால் சக்தி பெறுகிறது. எண்ணம் அழியாது. அதை விலக்கினால் மௌனம் எழும். அதற்குரிய முறைகள் பல. பூரண யோகத்திற்குரிய முறை சரணாகதி. தகப்பனாருக்குக் கடிதம் எழுத வேண்டும் என்பது ஓர் எண்ணம். இதை அகற்ற நாம் அதைச் சரணம் செய்ய முயல்கிறோம். கடிதம் எழுத வேண்டும் என்ற வேகத்தைவிடச் சரணம் செய்வது தீவிரமானால், எண்ணம் சரணமாகும். இல்லையெனில் சரணம் செய்ய முடியாது. சரணம் செய்தால் மனம் மௌனத்தால் நிறையும். இது பெருநிலை எனினும், முதல் நிலை. அடுத்த நிலை மௌனம் பெற எண்ணத்தின் அமைப்பைக் கரைக்க வேண்டும்.

எண்ணத்தின் அமைப்பு எனில் என்ன?

நாற்காலியின் அமைப்பு நான்கு கால்கள். மனித உடலின் அமைப்பு எலும்பு, நரம்பு, தசை, உறுப்புகளாகும். எண்ணத்திற்கு அவைபோன்ற அங்கங்கள் எவை? மொழி மேலெழுந்தவாரியான அமைப்பு. தகப்பனாருக்குச் செய்தி அனுப்ப நினைக்கும் உணர்வு உள்ளுறை அமைப்பு. இவை இணைவது எண்ணத்திற்கே உரிய அமைப்பு. இவற்றை நாம் காண முடியும். மொழி, உணர்வு, அவை இணையும் பாணி ஆகியவற்றை நினைத்து ஒவ்வொன்றாய் அவற்றைச் சரணம் செய்ய முனைந்தால், பலிப்பது கடினம். பலித்தால், முதலில் எழுந்த மௌனம் கனத்து மனத்தைக் கனமாக நிரப்புவதைக் காணலாம். பேரமைதி குடி கொள்ளும். ஓர் எண்ணம் கரைந்ததால் எழுந்த அமைதி இது.



மனம் என்பதில் எண்ணம் ஒரு பகுதி. தகப்பனாருக்குக் கடிதம் எழுதுவது என்பது ஓர் எண்ணம். மனத்தின் எண்ணங்கள் ஓர் ஆயிரம். அத்தனை எண்ணங்களையும் உருவாக்கும் திறன் மனத்தினுடையது. எண்ணத்தைச் சரண் செய்ததுபோல் அத்திறனைச் சரண் செய்யலாம். அது பெரியது. அது மனத்தின் முக்கியத்திறன் என்றாலும் ஒரு திறனாகும். சிந்தனை, கற்பனை, முடிவு, நினைவு, விருப்பு, வெறுப்பு, பாகுபாடு, நடுவு நிலை என மனம் பெற்ற திறன் பல. அத்தனைத் திறன்களையும் சரண் செய்தபின் மனம் எஞ்சி நிற்கும். மனம் ஜீவனின் கருவி.

கருவியை அதன் திறனிலிருந்து பிரித்துச் சரண் செய்தால், மனம் அழியும். அது பிரபஞ்சத்தின் மனமாகும். பிறர் எண்ணம் நம் எண்ணம்போல் தெரியும்.

மனம் கரைவதுபோல் உணர்வும், உடலும் கரைவது பூரண யோகத்திற்குரிய முந்நிலைச் சித்திகளாகும்.

கர்மத்தை முறைப்படுத்தினால் அபரிமிதமான சக்தி எழும். அதன் மூலம் கர்மயோகம் பலிக்கும்; ஞானத்தின் அடிப்படையான எண்ணத்தில் நாம் நிலைத்தால் எண்ணம் சிறந்து ஞானயோகம் பலிக்கும். முழு மனத்தின் சக்தியில் நாம் நிலைத்துத் திளைத்தால் ராஜயோகமாகும் அது. ராஜயோகம் யோகங்களில் சிறந்தது. அதை மேற்கொள்ளும் தகுதியுள்ளவர் அரிது என்கிறார் பகவான்.

பூரணயோகம் எண்ணம், உணர்வு, (கர்மம்) செயல் ஆகியவற்றில் நிலைத்து அவற்றின் திறனை யோகத்திற்காகப்

பயன்படுத்துவதை மாற்றி அவற்றைத் திருவுருமாற்றம் செய்கிறது. எண்ணம் ஜோதியாகவும், உணர்வு அன்பாகவும், திருவுருமாற்றம் அடைகின்றன. எண்ணம் அழிந்து ஜோதியாக மாறுவதை ஸ்ரீ அரவிந்தர் திருவுருமாற்றம் என்கிறார்.

அன்னை தம் யோகானுபவங்களாக எழுதியுள்ளவற்றில்,

**என் மனம் அழிந்துவிட்டது.**

**என் உணர்வு (vital) அழிந்துவிட்டது.**

**என் உடலே சிந்திக்கின்றது.**

**என் உடலே உணர்கிறது.**

**நான் ஆன்மா மூலம் அருளைப் பெறவில்லை.**

**என் உடல் அருளை ஆன்மாமூலம் பெறாமல் நேரடியாகப் பெறுகிறது.**

**என் உடல் அருளை (inner being) உள் மன ஜீவனாலும் பெறவில்லை.**

**என் உடல் அருளை சைத்திய புருஷனாலும் பெறவில்லை, நேரடியாகப் பெறுகிறது,**

என்றெல்லாம் எழுதியுள்ளார். சிந்தனை சிறந்தது. அதில் லயித்து (concentrate) அதன் மூலம் யோகப் பலனைப் பெறலாம் என்பதற்குப் பதிலாகச் சிந்தனையை அழித்து யோகப் பலனைப் பெறுதல் சிறந்தது என்பதே அன்னை மேற்கொண்ட தவம்.

சட்டத்தை கோர்ட் அமுல் செய்கிறது. எனவே நியாயம் தேடி கோர்ட்டுக்குப் போய் சட்டத்தைச் செயல்பட வைப்பது ஒரு முறை. அது பலிக்கும். சட்டத்தை நாடாமல் நியாயம் தேடி, கோர்ட்டுக்கு வெளியில், கோர்ட் அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் நியாயத்தை எடுத்து எதிரியிடம் சொல்லி ஜயிப்பது. சட்டத்தை நாடுவதைவிட உயர்ந்த முறை என்பதுபோல், எண்ணத்தை அழித்து யோகப் பலனைத் தேடுவது.



எண்ணத்தைச் சட்டத்திற்கு உதாரணமாகச் சொன்னால், மனத்தை கோர்ட்டிற்கு உதாரணமாகச் சொல்லலாம். கோர்ட் என்றும் உண்டு. நாம் சட்டத்தைத் தேடி கோர்ட்டுக்குப் போகாமலிருந்தாலும் கோர்ட் செயல்பட்டுக்கொண்டிருக்கும். சமூகம் நாகரீகமடைந்து சட்டமும், கோர்ட்டும் தேவையில்லை என பண்பட்டு கோர்ட்டை எடுத்துவிடுதல் (abolish) மனத்தை அழிப்பது போலாகும். அன்னை மனத்தையும், உணர்வையும் அதுபோல் அழித்தார்.

☆ ☆ ☆

**727) மனம் விழிப்பானது என்பதால் இதைச் செய்வது முடியும். உணர்வும் உடலும் விழிப்பற்றவை என்பதால் அங்கு இதுபோல் எளிமையாகச் செயல்பட முடியாது.**

***மனம் அழிய இசையும், உடல் மறுக்கும்.***

சரணாகதியைப் பற்றி ஸ்ரீ அரவிந்தர் பேசும்பொழுது “இது கடினம்” என்கிறார். மௌனம் எத்தனைச் சிரமமானது என்றறிந்து அதைச் சாதித்தவர்கள் எண்ணத்தைச் சரணம் செய்தால் அதன் சிரமம் தெரியும். மௌனம் என்பது எலக்ஷனில் ஜெயித்து, மெஜாரிட்டி பெற்று முதன் மந்திரியாவது என்றால், எலக்ஷனில் நிற்காமல் ஒருவரை அரசியல் கட்சிகள் அழைத்து ஏகமனதாக முதன் மந்திரியாக்குவது சரணாகதிக்கு ஒப்பாகும்.

அதுவே அடுத்த கட்டத்தில் உணர்வில் பலிப்பது என்பது அதேபோல் பிரதமராவதாகும். உடல் அசைவுகளை, பகவான், அன்னைக்கு முன் எவரும் சமர்ப்பணம் செய்ய முயன்றதில்லை. இன்று உலகில் ஒரு சர்க்கார் உலகை ஆட்சி செய்யவில்லை. அது ஏற்பட்டு, அதன் தலைமை மேற்சொன்னதுபோல் அழைத்து அமைப்பது, உடலைச் சமர்ப்பணம் செய்வதாகும்.

பொதுவாக இவை நம் வாழ்வுக்கு அப்பாற்பட்டவை. இவற்றை அறிய ஒருவர் விரும்பினால் அவர் ஓர் எண்ணத்தை சமர்ப்பணம்

செய்து பார்க்கலாம். சமர்ப்பணம் பலித்துவிட்டால், உலகமே நமக்கு அடங்கியது போலிருக்கும். இதுவரை அதைச் செய்தவர்களை நான் சந்தித்ததில்லை. சமர்ப்பணம் செய்ய முயன்றவர்களை அறிவேன்.

எண்ணம் சமர்ப்பணமானவர், எல்லா எண்ணங்களையும் சமர்ப்பணம் செய்தால் உணர்வைச் சமர்ப்பணம் செய்ய முன்வரலாம். அடுத்த கட்டத்திற்கும் அதே சட்டம்.

சோதனையாக ஓர் உணர்வைச் சமர்ப்பணம் செய்தால் அதன் அம்சங்கள் - சிரமம், வலிமை, கடுமை - தெரியவரும். பலிப்பது அரிது. பலிக்கும் போலிருந்தால் யானை பலம் வரும். சில சமயங்களில் உடல் சில்லிடும். உலகமே அசைவற்று நின்றது போலிருக்கும்.

உடல் அசைவுகளைச் சமர்ப்பணம் செய்ய முயல்பவர்கள் sub-conscious movement தன்னையறியாமல் செய்பவற்றை - தலையைச் சொரிவது, கைகளை ஆட்டிப் பேசுவது, வலக் காலை முன் வைத்து நடப்பது - போன்ற எளிய செயல்களைக் கவனித்து மாற்ற முயன்றால், அதன் முக்கியத்துவம் புரியும்.

தினமும் தலையில் வாகு எடுத்துத் தலை சீவுவதைச் சற்று மாற்றிப் பார்த்தால், கை, நினைவு, சுபாவம், உணர்வு எப்படி "ஒத்துழைக்கின்றன" என அறியலாம்.

உடலில் இதயம், நாடித்துடிப்பு, ஜீரணம், ரத்த ஓட்டம் போன்றவற்றை நாம் அறிந்து "சமர்ப்பணம்" செய்யும் செயல்களாகும் நிலை உடலைச் சமர்ப்பணம் செய்வதாகும். அது அரிய நிலை.

Punctuality குறித்த நேரத்தில் செயல்படுவது நல்லது, அழகு, பயன்தரும் என்று மனம் பூரணமாக ஏற்றுக் கொள்கிறது. அதை உடலோ, உணர்வோ செயல்படுத்துவதில்லை. மனம் விழிப்பானது என்பதால் இதன் உட்கருத்தை அறிகிறது. யோகத்தில் முதிர்ச்சியடைந்து வேதகாலத்திலிருந்து இன்றுவரை முன்னோடிகளான முனிவர்கள், தபஸ்விகளைப் பற்றி அன்னை,



அவர்கள் ஜோதிமயமானவர்கள், அவர்கள் உடலைத் தாங்கி அன்று இந்தியாவில் வாழ்ந்ததால், இன்று அனைத்து இந்தியருடல்களும் ஒளி பெற்றுள்ளன என்கிறார். இவர்கள் உலகத்தில் மகா புருஷர்கள். அவர்கள் பெற்றது ஆத்ம ஞானம், அடைந்தது சச்சிதானந்தம், பரப்பிரம்மம். அவர்களுள் பலர் கோபமுற்று சபித்துள்ளனர். பரப்பிரம்மத்தை ஆன்மா எட்டினாலும், அதற்குரிய சித்தியைப் பெற்றபொழுதும், அதன் ஜோதியின் சாயல் அவருடல் மூலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் நாட்டு மக்களுடலுள் ஒளியைப் பொதித்து வைத்தாலும், ஆன்மாவுக்கு அடுத்த மனம் பக்குவப்படுவதில்லை. அதன் கீழுள்ள உணர்ச்சி கோபத்தால் பொங்கி எழத் தவறியதில்லை. இது முனிவர்களின் குறைபாடில்லை. கோபத்தின் வேகம், உணர்வின் இருண்ட தன்மையை விளக்குவதாகும்.

கோபப்படாத சாந்த சொரூபியாக இருந்தவர் அநேகர். விஸ்வாமித்திரர், துர்வாசர்போல் கோபத்திற்குப் பேர் போனவர்களும் உண்டு. உணர்வு கட்டுப்பட பரப்பிரம்ம சித்தியை ஆன்மா பெற்றால் போதாது. உணர்வு திருவுரு மாறுவது மேலும் சிரமம். பூரண யோகம் உடலைத் திருவுருமாற்ற முனைகிறது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் கோபப்பட்டதில்லை. ஒரே ஒரு முறை HE was annoyed பகவான் முகத்தைச் சுளிக்கும்படியாயிற்று. அதையும் அவர் உடனே மாற்றிக்கொண்டார் என அன்னை கூறுகிறார்.

பகவான் அன்னை விரும்பியது எதையும் மறுத்ததில்லை. ஆனால் அன்னை அவரை உடற்பயிற்சியை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதை மறுத்துவிட்டார். உடலில் வேறு ஒரு சித்திக்காக - உத்தாப்பானா - தினமும் 7 மணி நேரம் நடந்ததாக ஒரு குறிப்பு வெளியாகியுள்ளது. உடல் திருவுரு மாற்றத்தை அவர் மேற்கொள்ளவில்லை. அன்னை அதை மேற்கொண்டார். முதல் நிலை பலித்து பூர்த்தியாயிற்று. உடலின் ஜீவியம், சத்திய ஜீவியமாகத் திருவுருமாறியது.

அடுத்த நிலையில் (substance) உடலின் பொருள் திருவுருமாற வேண்டும். அது அன்னைக்கு மரண வேதனையைக் கொடுத்தது. “இந்த யோகத்தை நான் எவர்க்கும் சிபார்சு செய்யமாட்டேன்” என்று அன்னை கூறினார்.

✯ ✯ ✯

**728) இதுபோன்ற தவமுயற்சியை மேற்கொள்ளும் முன் அந்நிலைக்குரிய அகந்தையை அழிப்பது அவசியம்.**

- ***அழியும் கரணங்கள் தவம் சித்திப்பது.***
- ***அகந்தையை அழித்து, கரணங்களை அழிப்பது தவப்பயன்.***

அகந்தை என்பது மனத்திலும், உணர்விலும், உடலிலும் உள்ளது. இந்த யோகத்தின் அடிப்படை அகந்தை அழிவது. அகந்தையின் வேர் மனதிலும், சிக்கல் உணர்விலும் உள்ளதாக பகவான் கூறுகிறார்.

மோட்சம் அடைவதை வேதரிஷிகள் அகந்தையை அழித்து சரணாகதி மூலம் செய்தனர். அகந்தையை அழித்தாலும், அழிக்காவிட்டாலும், மோட்சம் பெற முடியும் என்பது அனுபவம்.

நல்லவன், கெட்டவன், உயர்ந்தவன், உன்னதமானவன், தறுதலை, சூதாடி, திருடன் ஆகியவர் பட்டம் எடுக்க முயன்றால், கல்லூரி நல்லவனுக்கு மட்டும் அனுமதி தருவேன் என்று கூறுவதில்லை. கல்லூரிப் படிப்பை நாடுபவன் பொதுவாக நல்லவனாகவும், சில சமயங்களில் உயர்ந்தவனாகவும், ஓரிருவர் உன்னதமானவராகவும், உத்தமராகவும் அமைவதும் உண்டு. அதனால் பட்டம் பெற்றால் அவர் உன்னதமானவர் என்று கூற முடியாது. குணம் எப்படியிருந்தாலும், அறிவிருந்தால் பட்டம் பெறலாம் என்பது உண்மை. தவம் நிஷ்டையின் வலிமையைப் பொருத்தது. நிஷ்டை பலித்தால் தவம் பலிக்கும். தவம் பலித்தால் மோட்சம் கிட்டும். தவம் பலிப்பதற்கும் அகந்தை அழிவதற்கும் நேரடியான தொடர்பில்லை.



- ***பூரண யோகத்தின் அடிப்படை அகந்தை அழிவது.***
- ***அதன் கருவி சரணாகதி.***
- ***சரணாகதி அகந்தைக்கு நேர் எதிரானது.***

Mental ego, vital ego, physical ego, மனம், உணர்வு, உடலின் அகந்தைகள் கரையும்பொழுது தலையே அகன்று விரிவது போலிருக்கும். Vital ego உணர்வின் அகந்தை கரையும்பொழுது இனிமையான உணர்வு நம்மிலிருந்து எழுந்து பரவும்.

உடலின் அகந்தை அசைய ஆரம்பித்தால் துணி கிழிவது போன்ற சப்தம் கேட்பது சாதர்களுடைய அனுபவம். எந்த நிலையில் பூரண யோகத்தை மேற்கொள்ள விரும்பினாலும், அந்நிலைக்குரிய அகந்தை அழியாமல் அதை ஆரம்பிக்க முடியாது.

சிந்தனையை அழிப்பது, மனத்தைக் கரைப்பது, உணர்வை உருவில்லாமல் செய்வது, உடலின் இருளை அழிப்பது ஆகியவை தவத்தின் உயர்ந்த நிலைகள். இதுவரை தவசிகள் மேற்கொள்ளாதவை.

அன்னையை அறிந்து தீவிரமாக அவர் எழுதியவற்றைப் படித்த பரம்பரை ஆசாரச் சீலர் சொன்னதாவது : “இதுவரை அன்னை யாருமே சொல்லாததைச் சொல்லியிருக்கிறார். மனிதன் மாற வேண்டும் என்று எவருமே சொல்லவில்லை. என்ன மந்திரம், பூஜை, யக்ஞம் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று சொன்னார்களே தவிர, நாமே மாற வேண்டும் என்பதை எந்த புத்தகத்திலும் சொல்லவில்லை.”

மனிதனுடைய அகந்தை கரைய வேண்டும், மனிதன் மாற வேண்டும் என்று சொல்லாத பெரியவர்களே இல்லை. எல்லா மதங்களும், எல்லாச் சாஸ்திரங்களும் அதைத் தவறாமல் சொல்கின்றன. நடைமுறையில் நாம் புரிந்து கொள்வதில்லை. பூஜை செய்தால் போதும் என்று நினைக்கக் கூடாது. அது தவறு.

உண்மையான உணர்வையே கடவுள் ஏற்கிறார் என்பதை விளக்க ஏராளமான கதைகளும் உண்டு.

மனிதன் எப்படி மாற வேண்டும் என்பதை, கதை எல்லா இடங்களிலும் சொல்கிறது. அன்னை அகந்தைக்குக் கொடுக்கும் விளக்கம் அவர்கள் எல்லாம் சொல்லியதைக் கடந்தது. அன்னை முதலிடம் கொடுப்பது அகந்தையை அழிப்பது. அகந்தையின் ஆதி, இன்றைய உருவம், ஆதிக்கம், வெளிப்பாடு, அமைப்பு ஆகியவற்றை அன்னை விளக்கமாகக் கூறுகிறார். அன்னையின் விளக்கத்தைக் கேட்டபின், நம்மை நாம் சோதனை செய்தால், அகந்தை தவிர நம்மிடம் என்ன இருக்கிறது என்ற கேள்வி எழும்.

ஆன்மாவும், பிரகிருதியும் தவிர அனைத்தும் அகந்தை என்பது அன்னை நிலை. உடலுறுப்புகள், அவற்றின் செயல்கள் பிரகிருதியைச் சேர்ந்தவை. நாமே விரும்பி செய்வன அனைத்தும் அகந்தையின் செயல்கள் என்பது அன்னையின் விளக்கம்.

சிந்தனையை அழித்து மௌனத்தை நிலைநாட்டுவது, மனத்தை அழித்து அதன் கடமையை உணர்வைச் செய்ய வைப்பது, உடலின் இருளைப் போக்கி ஒளிமயமாக்குதல் ஆகியவை அகந்தையைக் கடந்த நிலையில் உள்ள செயல்கள். சிந்தனை அழிந்தால் பிரபஞ்சத்தின் சிந்தனை மனத்தைத் தழுவும். மனம் அழிந்தால் பிரபஞ்சத்தின் மனம் நம்மை ஆட்கொள்ளும். இயல்பாக அகந்தை அழிந்தபின் மேற்கொள்ளும் விரதங்கள் இவை. எனவே இவற்றை மேற்கொண்டால், முதலில் அகந்தையை அழிப்பது அவசியம்.

அகந்தை ஒரு கூடு, தடை. இம்முயற்சிகள் பரந்து விரியும் தன்மையுடையன. அதற்குத் தடையும், கூடும் இருத்தல் கூடாது.

☆ ☆ ☆

**729) நாம் கண்மூடியாக விழிப்பற்ற நிலையில் இருந்தாலும் ஜீவியம் வளர்ந்தபடியிருக்கிறது. நாம் அறியாத நிலையிலும்**



**பின்னணியில் ஆன்மீக அனுபவங்கள் நிகழும். மேல் மனம் அறியாத நிலையில் சைத்தியப் புருஷன் வளரும். அனுபவம் சேரும். ஜீவியம் மலரும். அதற்கெல்லாம் ஒரு வரையறையுண்டு. இதுவே பொதுவான முடிவான சட்டமாகாது.**

*விழிப்பற்ற நிலையிலும் ஜீவியம் விழிப்பாக வளரும்.*

மனிதனுக்கு அவன் குறை தெரிவதில்லை என அனைவரும் கூறுகிறோம். மனிதனுக்கு அவன் நிறைவு தெரிவதில்லை என்பது ஆன்மீகத்துறையில் முக்கியக் கருத்து. இவையிரண்டையும் சேர்த்து,

**மனிதன் தன்னையறியவில்லை**

என்று நாம் கொள்ளலாம். பெருநகரங்களில் உள்ள மாணவர்கட்கு வாய்ப்பு அதிகம். மற்ற நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள மாணவர்களை அவர்கள் சூழ்நிலைக்கு ஏற்பவே புரிந்துகொள்வார்கள். பெரிய தொழிற்சாலைகளில் நிபுணனாகப் பேர் வாங்கியவர்கள் expert workers முக்கால்வாசிப் பேருக்கு மேல் கிராமத்து இளைஞர்கள். இவர்கள் பாக்டரியில் வந்து சேரும்வரை எவருக்கும் இவர்களுடைய திறமை தெரியாது. இவர்கட்கே தெரிய வழியில்லை. Aptitude test மூலம் இதைக் கண்டுபிடிப்பது வழக்கம். சிறந்த மொழியறிவுள்ள மாணவனுக்கு கட்டை குரலிருந்தால், அனைவரும் அவனை அவன் குரல் போலக் கருதுவார்களே தவிர அதைக் கடந்து அவனுக்கு மொழியில் சிறப்பான திறமையுள்ளது எனக் காணமாட்டார்கள். Mechanical ability, linguistic tune மெஷினறிவு, மொழிப்பயிற்சி, இதுபோல் எனில், பையனுடைய புத்திசாலித்தனம் பலசமயங்களில் வெளிவருவதில்லை. நல்ல சிறந்த புத்திசாலிகளை மக்கு எனவும் கருதுவதுண்டு.

மேலெழுந்தவாரியான திறமைகளை நாம் அறிய முடியவில்லை என்றால் ஆத்மா மறைந்துள்ளது, புதைந்துள்ளது, அதைப் பிறர் அறியவில்லை, நாமே அறியவில்லை என்பது ஆச்சரியமில்லை.

மேதை, அவதாரப் புருஷன், புத்திசாலி, திறமைசாலி, ஆன்ம விளக்கம் பெற்றவர்கள் சில சமயங்களில் முளையிலே தெரிவதுண்டு. பல சமயங்களில் தெரிவதில்லை. அன்னை பக்தர்கள் அதுபோல் தங்களுள் வளரும் ஆன்மீகப் பலனைப் பொதுவாக அறிந்தாலும், விவரமாக அறிவதில்லை. சமூக அந்தஸ்து உயர்வது, மன நிம்மதி வளர்வது, குணம் சிறப்படைவது, மனிதன் உயர்ந்த மனிதனாக மாறுவது, ஆன்மா விழிப்படைவது, வசதி பெருகுவது, இல்லாத வாய்ப்பு வந்து பலிப்பது, ஆபத்தான கண்டங்கள் நம்மையறியாமல் விலகுவது, நம் சூழ்நிலையிலுள்ள விரோதிகள் தாங்களாகவே வெளியூர் போவது, புதிய நல்ல சூழலுக்கு நாம் போய்ச் சேர்வது, ஆரோக்கியம் பெருகுவது அன்பர்கள் தவறாது பெறுவது. பெரும்பாலும் “எனக்கு அப்படி எதுவும் நடக்கவில்லை” என்பவர் பலர். நினைத்துப் பார்த்தால் பெற்றது பேர் அளவு, முடிவற்றது எனத் தெரியும்.

குழந்தை பள்ளியில் சேர்ந்து படிக்கும்பொழுது தினமும் தான் எதைக் கற்றுக்கொள்கிறது எனப் புரிந்து கொள்கிறது. அது பெற்றோருக்குப் புரியும். ஆனால் 3 வயதுக்குமுன் குழந்தை ஒவ்வொரு நிமிஷமும் கற்றுக் கொண்டபடியேயிருப்பதை நாமும் அறிவதில்லை, குழந்தையும் கவனிப்பதில்லை. சிறு வயதில் குழந்தை பேசக் கற்றுக் கொள்வதுபோல் பல ஆயிரம் விஷயங்களைப் பெற்றோர் மூலம் கற்றுக் கொண்டாலும், பல ஆயிரம் விஷயங்களைத் தன்னை அறியாமல் கற்றுக்கொள்கிறது. அதேபோல் ஆன்மா ஒவ்வொரு நிமிஷமும் ஓர் அனுபவத்தைப் பெறுகிறது. நாமே முயன்று அறிவதை மட்டுமே நாம் அறிகிறோம். மற்றதை நாம் அறிவதில்லை. இவ்விஷயத்தில் நாமும் குழந்தை போலிருக்கிறோம் என்று அன்னை அடிக்கடி சொல்வார்கள்.

ஆசிரமத்தில் வந்து சேர்ந்து பல ஆண்டுகளாகியும் தாம் யோகம் செய்யவில்லை, தமக்கு யோக அனுபவங்களில்லை, யோகம் பலிக்கவில்லை என்று அன்னையிடம் முறையிட்டும், அதனால்



ஆசிரமத்தை விட்டுப் போகவேண்டும் என்று சிலர் கேட்டதுண்டு. அவர்களுக்கு அன்னை மேற்சொன்னது போன்ற பதிலைச் சொல்வதுண்டு. இதில் உள்ள முறையையும், உண்மையையும் நம் மரபு அறியும்.

கணவனுக்குப் பணிவிடை செய்யும் மனைவிக்குக் கணவனுடைய சாதனையின் புண்ணியத்தில் பங்குண்டு. சிஷ்யன் குருவிடமிருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் யோகச் சாதனையைப் பெறுகிறான். நேரடியாக அவர் கூறும் மந்திர உபதேசங்களாலும், மறைமுகமாக அவர் ஆன்மாவோடு அவர் இணைந்திருப்பதாலும் சிஷ்யன் பலன் பெறுகிறான்.

அன்னை பக்தர்கள் மற்றோர் அம்சத்தையும் காணலாம். அதுவும் நம் மரபில் உண்டு. ஒரு பக்தர் யோக முன்னேற்றமடைந்தாலும், வாழ்வில் முன்னேற்றமடைந்தாலும், சில சமயங்களில் அவர் எதிரிக்கு அதே பலன் ஏற்படுவதுண்டு. ஏனெனில் எதிரி என்பதால் எந்த நேரமும் பக்தரை அவர் வெறுப்பாக நினைத்துக் கொண்டிருப்பதால் மனத்தளவில் தொடர்பு ஏற்பட்டு, அதன் மூலம் இவர் செய்யும் யோகப் பலன் எதிரிக்குப் போகிறது. இது பொது விதியாகாது. விலக்காகச் செயல்படுவதாகும்.

தான் வளர்த்து ஆளாக்கிய சிறுவன் தன்னைவிட்டுப் போய் எதிரியாகி பக்தரின் எதிரிக் கூட்டத்தில் ஒருவனானதை மனம் பொறுக்காமல் ஒரு மாதம் தொடர்ந்து அவனை மனதால் கரித்துக் கொட்டியவர், ஒரு நாள் அவன் தெருவில் போகும்பொழுது அவன் முகம் அளவு கடந்து பிரகாசமாக இருப்பதைக் கண்டு வியந்தார். வெறுப்பால் கடிந்ததால் இவர்மூலம் அவன் பெறுவது இவ்விஷயத்தில் அன்னையின் சக்தி என்பதால், அவன் முகம் ஒளி வீசியது.

☆ ☆ ☆

**730) சமூக மாறுதல், மனநிலை மாறுதல், ஜீவியம் மாறுதல் ஆகியவற்றை மேல் மனம் ஏற்றுக்கொள்ள விரும்பினால்,**

**உடனே ஏற்றுக்கொள்ளும். ஆழ்ந்த மனம் அதுபோல் ஏற்றுக்கொள்ளாது.**

***மேல்மனம் ஏற்பதை ஆழ்மனம் மறுக்கும்.***

வெளிநாட்டில் போய் விரும்பித் தங்கியவர்கள் அநேகர். வயதானபின் உடல் தான் பிறந்த மண்ணுக்குப் போக விரும்பும். அதைத் தடுக்க முடியாது. J.R.D. டாட்டாவின் தாயார் பிரான்சில் பிறந்தவர், பிரெஞ்சுக்காரர். அவர் இறந்தபின் அவருடல் பிரான்சில் அடக்கம் செய்யப்பட்டது.

நேருவுக்கு ஆங்கிலமே 'தாய்மொழி' என்ற அளவில் அவர் வாழ்விருந்தது. தாம் கனவு காண்பதும் ஆங்கிலத்தில் என்று ஒரு சமயம் கூறினார். ஆனால் அவர் ஹிந்தியில் பேசும்பொழுது எழும் ஆர்வம், வேகம், உணர்ச்சி ஆங்கிலத்திலிருக்காது.

குழந்தைகள் மம்மி, டாடி என்று இன்று பெற்றோரை அழைக்கின்றனர். அம்மா என்றழைக்கும்பொழுதுதான் தாய்க்கு அது தன் குழந்தை போலிருக்கும். பழைய நாள் கதை ஒன்று;

வடநாட்டிலிருந்து சென்னை வந்தவர் பல மொழிகளைச் சரளமாகப் பேசுகிறார். தமிழ் கொச்சையாகப் பேசுவதுபோல், பெங்காலியும் கொச்சையாகவும், தெளிவாகவும் பேசுகிறார். அவருடைய சொந்த ஊர் எது என்று கேட்க தைரியமில்லாத சில சிறுவர்கள் அதை அறிய முடியாமல் தவித்தபொழுது ஒருவன் மட்டும் "இரண்டு நாளில் கண்டுபிடிப்பேன்" என்றான். 2 நாள் கழித்து வந்து அவர் தமிழர் என்றான். எப்படிக் கண்டுபிடித்தான் என சிறுவர்கள் அறிய விரும்பினர். அவர் பகலில் தூங்கும்பொழுது வெந்நீரைக் கைதவறி கொட்டியதுபோல் பையன் கொட்டினான். "யார்ரா அவன்" என்று அலறினார். **இயல்பாக எழுவது தாய்மொழி, அது ஆழ்மனத்திற்குரியது.**



30 ஆண்டு அமெரிக்காவிலிருந்து வீடு திரும்பியவர் வத்த குழம்பும், சுட்ட அப்பளமும் சாப்பிட்ட பிறகு "இன்றுதான் சாப்பிட்டது போலிருக்கிறது" என்றாராம்.

தகப்பனாரைப் பார்க்கமாட்டேன் எனச் சிறு வயதில் சபதம் செய்தவர், மனைவி முகத்தில் விழிக்க மாட்டேன் என்று அதுபோல் பலகாலம் சொல்லியவர்கள் மரணப்படுக்கையில் விழைவது "அப்பா வரமாட்டாரா?", "அவள் எங்கே?" என்பது. ஆழ்மனம் உடலுக்குரியது. உடல் தன் ஆயுள் முடிந்தபின் மேல்மனம் வைராக்கியமாகக் கருதியவற்றை எல்லாம் மறந்து ஆதிநாளில் தான் முதலில் கற்றதை, ஆழ்ந்து விரும்பியதை, ரத்த பாசத்தை விழையும். அது ஆழ்மனத்தின் தன்மை.

- **ஆழ்மனம் எளிதில் ஏற்றுக்கொள்ளாது.**
- **ஏற்றுக்கொண்டதை எளிதில் மறக்காது.**

சுபாவம் ஆழ் மனத்திற்குரியது. பாஷன் என நாம் கற்பது மேல் மனத்திற்குரியது. Blood is thicker than water. ரத்தபாசம் ஆழ்ந்தது என்பது ஆங்கிலப் பழமொழி. ஆங்கிலக் கவியான சரோஜினி நாயுடுவுக்கும், அதுபோன்ற மற்றவர்க்கும் உணர்வு எழும்பொழுது தாய்மொழியில் ஏற்படும் செறிவு அந்நிய மொழியில் வாராது.

**பகவான் ஸ்ரீ அரவிந்தர் அழியா இலக்கியமாக எழுதிய உலகப் பெரும் காப்பியம், காவிய வடிவம் பெற்றது அவரது தாய்மொழியில் அன்று, ஆங்கிலத்தில்.**

அரசியலிலும், யோகத்திலும் விதிவிலக்காக இருந்ததைப்போல் அமர காவியம் இயற்றியதிலும் பகவான் விதிக்கு விலக்கானவர்.

Fashion பாஷன் மாறினால் சிறுவர்கள் உடனே அதைப் பிடித்துக்கொள்வதைப்போல் பெரியவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அறிவு ஏற்பதைப்போல் உணர்வு எளிமையாக

ஏற்றுக்கொள்ளாது. புதிய கருத்துகளை நாட்டில் உயர்ந்த படிப்பாளிகள், தலைவர்கள், செல்வர்கள் ஏற்பதைப்போல் பொதுமக்கள் சீக்கிரம் ஏற்க முன்வருவதில்லை. மாற்றம் ஏற்படுவதுண்டு. எல்லா நிலைகளும் மாற்றத்தை ஒரே அளவில் ஏற்பதில்லை. ஆண்கள் நாட்டின் புதிய நிலைக்கேற்ப மாறுவதைப்போல் பெண்கள் மாறுவதில்லை. நகரம் மாறுவதைப் போல் கிராமம் மாறுவதில்லை. அதேபோல் மேல் மனம் சீக்கிரமும், ஆழ்ந்த மனம் மெதுவாகவும் மாறுவது மனித இயல்பு.

இராகு காலத்தை இனி நம்ப வேண்டியதில்லை என முடிவாக நாம் அதை விட்டுவிட்டபின், பல ஆண்டுகட்குப்பின் ஒரு முக்கியமான காரியம் இராகு காலத்தில் அமைந்துவிட்டால், எங்கிருந்தோ உள்ளிருந்து ஒரு கேள்வி, சந்தேகம், பயம் எழுவதுண்டு. அந்த பயத்தை எழுப்புவது ஆழ்ந்த மனம்.

வேறு ஜாதியில் ஆர்வமாகத் திருமணம் செய்துகொண்டவர், பிள்ளைகட்குத் திருமணம் செய்யும் நிலையில் தம் ஆழ்ந்த மனம் எழுப்பும் கேள்விகளை அறிவார். எத்தனை முறை ஒதுக்கினாலும், எங்கிருந்து இக்கேள்விகள் எழுகின்றன, எப்படி எழுகின்றன என்று தெரியவில்லையே என்று நினைப்பார். விதவையானபின் திருமணம் செய்துகொண்டவருக்கு இதுபோன்ற கேள்விகள் எழுவதுண்டு.

எல்லோரும் பணம் வாங்கும் ஆபீசில் கடைசியாகத் தாமும் பணம் வாங்கலாம் என முடிவு செய்தவருக்குப் பல ஆண்டுகள் கழித்து ஆழ்ந்த மனம் பல பிரச்சினைகளை எழுப்பும். அதே ஆபீசில் பணத்தைத் தொடக்கூடாது என முடிவு செய்தவருக்கும் ஓய்வு பெறும் நிலையில் நாம் செய்தது சரியா என உள்ளிருந்து குழலோசை போல் குரல் எழும்.

1920இல் ஆசிரமம் வந்து பகவானைத் தரிசித்தவருக்கு பகவானைவிட அவர் வசித்த அறை மனதில் ஆழமாகப்பட்டது. பலமுறை தம் கனவில் யாரோ தம்மைத் தூக்கி ஓர் அறையில்



வீசுவதைக் கண்டிருக்கிறார் அவர். பகவானைத் தரிசிக்க வந்தபொழுது அவர் வசித்த அறையே தான் கனவில் கண்ட அறை என்று பார்த்தவுடன், இனி நமக்குரிய இடம் ஆசிரமம் என இங்கு வந்து மனைவியுடன் சேர்ந்துவிட்டார். 30 வருஷங்களுக்கு மேல் இங்கிருந்து காலமானார். காலையில் எழுந்து சிவானந்தலகரி சொல்வதையோ, மாலையில் இராமாயணம் படிப்பதையோ அவரால் விடமுடியவில்லை. தாம் காலமாகுமுன், அன்னையின் கோட்பாட்டுக்கு நேர் எதிராகத் தம் பரம்பரைப் பழக்கப்படித் தம் உடலைத் தகனம் செய்யச் சொன்னார். மேலும் அஸ்தியைக் கங்கையில் கரைக்கச் சொன்னார். அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட பகவானும், அன்னையும், அவர் மேல் மனம் ஏற்றுக்கொண்டவை. ஆழ்ந்த மனத்தில் அவரால் பழைய பழக்கங்களை விடமுடியவில்லை. ஒரு சமயம் இவர் அன்னையிடம் சென்று, ‘‘நீங்கள் சொல்வதையெல்லாம் நான் செய்கிறேன். ஏன் எனக்கு யோகம் பலிக்கவில்லை’’ என்றார். அன்னை தமக்குத் தெரியாது என்று கூறினார். யோகம் பலிக்க ஆழ்ந்த மனம் மேல் மனம் ஏற்பதை ஏற்க வேண்டும்.

☆ ☆ ☆

*தொடரும்....*

**ஜீவிய மணி**

பரமாத்மா ஜீவாத்மாவாக மாற அகந்தை வழி செய்கிறது.

## இம்மாதச் செய்தி

**அரை நிமிஷம் தாமதிப்பது அன்னையில்லை.**

**Life Response is a Timeless response.**





## லைப் டிவைன்

கர்மயோகி

### *10. சித்-சக்தி*

ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியை விவரிக்கவேண்டி, சத்-புருஷனை விளக்கியபின் சித்-சக்திக்கு வருகிறார். உலகம் பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்டது என்ற முன்னோர்கள், எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்ற கேள்வி நமக்குரியதன்று, உலகம் உள்ளது, அதை நாம் ஏற்க வேண்டும் என்றனர். பகவான் ஸ்ரீ அரவிந்தர் சத்திய ஜீவியம் உலகத்தை சிருஷ்டித்தது, என்பதுடன் பிரம்மம் முதல் ஜடம்வரை உள்ள எல்லா நிலைகளையும் - சத், சித் ஆனந்தம், சத்திய ஜீவியம், மனம், வாழ்வு, ஜடம் - என்ன என்பதையும் விவரித்துள்ளார். Spirit ஆன்மா என்ற சொல்லை நாம் அறிவோம். அது எங்கு உற்பத்தியாயிற்று, எப்படி என்பதையும் கூறுகிறார்.

சத் என்பது சக்தி என்றவர், சக்தி என்பதென்ன, விஞ்ஞானிகளும், நாத்திகவாதிகளும், ரிஷிகளும் கூறுவதுபோல் இது தானே இயங்கும் சக்தியா, சத்புருஷனின் அம்சமாக வெளிப்பட்ட சக்தியா என்பது கேள்வி என இவ்வத்தியாயத்தை ஆரம்பிக்கிறார். தனித்து இயங்கும் சக்தி என்றால், பரிணாமம், ஆன்மீகப் பரிணாமம், லீலை என்பவை அர்த்தமற்றவையாகின்றன. சத்துடைய அம்சமாக சக்தி எழுந்தால், அது தொடர்வது பரிணாமமாகும். சக்தி, சத்திலிருந்து வெளிப்படுகிறது என்று ரிஷிகள் கூறியதை தர்க்கரீதியாக நிரூபித்து, சக்திக்கு ஜீவனுண்டு, ஜீவியமுண்டு என இந்த அத்தியாயத்தை முடிக்கிறார்.

உலகில் நாம் காண்பவை பொருள்கள், மனிதர்கள், நிகழ்ச்சிகள். இவை அனைத்திற்கும் உருவம் உண்டு. நம் பார்வை

உருவத்தை ஊடுருவி, அதைக் கடந்து சென்றால், நாம் காண்பது சக்தியாகும். ஜட சக்தியாகவும், சூட்சுமச் சக்தியாகவும் அது தென்படுகிறது. ரிஷி முன்னோர்கள் இதை சமுத்திரமாகக் கண்டனர். அசைவற்ற சமுத்திரமான சக்தி அது. அதன் அசைவு, சிருஷ்டிக்கும். நாம் இச்சக்திகளில் சூட்சுமச் சக்தியைக் காண்பதில்லை. ஜடசக்தியைக் காணமுடியும். நம் மனம் மூளை எனும் ஜடப்பொருளில் வேலை செய்வதால், நமக்கு ஜடசக்தியை உணரமுடிகிறது. ஜடம் – பொருள் – என்பது இரு ஜடப் பொருள்கள் சேர்வதால் எழுவது. அப்படி எழுந்த ஜடத்தைப் பார்ப்பது எளிது. ஒரு மலை நம் கண்ணுக்குத் தெரியும். காற்று தெரியாது. ஆகர்ஷண சக்தி தெரியவே தெரியாது. மனத்தால் சுலபமாக ஜடப்பொருள்களைக் காணமுடியும். நம் முன்னோர்கள், ரிஷிகள். அவர்களே இந்திய விஞ்ஞானிகள். பஞ்சபூதங்களை அவர்கள் விவரித்துள்ளனர். ஜட சக்தி என்பது பஞ்சபூதங்கட்கு ஆரம்பம். இது சற்று மாறினால் உற்பத்தியாவது சப்தம். ஜட சக்தியின் முதல் உருவம் தனித்தன்மை வாய்ந்தது. அத்தனிக் குணத்தை சப்தம் என்று வர்ணித்தனர். அதன் அடுத்த நிலை ஆகாயம். சப்தமும், ஆகாயமும் ரூபங்களை உற்பத்தி செய்ய முடியாது. ரூபங்களை உற்பத்தி செய்ய சக்தியின் ஓட்டம் தடைபட வேண்டும், உரசலிருக்க வேண்டும். உராய்வு இருந்தால் நிலையான உறவு ஏற்படும். சக்தியின் ஓட்டத்தில் தடை, உரசல், சுருக்கம், விரிவு, சக்தி மீது சக்தி உராய்வது, இருப்பது அவசியம். ஜடசக்தி தன் முதல் நிலையான ஆகாயம் என்பதைச் சற்று மாற்றுகிறது. அப்படி இரண்டாம் நிலை ஏற்படுகிறது. அதை வாயு என்றனர். இதற்குக் குறிப்பான குணம் உண்டு. சக்தி சக்தியுடன் தொடர்பு கொள்வதே அக்குறிப்பான குணம். ஜட சக்திகளுக்கு அடிப்படைத் தொடர்பு அல்லது தொடு உணர்ச்சி. அப்படியும் ஏற்படுவது மாறுபடும் சக்தியே தவிர நிலையான ரூபமில்லை. நிலையான ரூபம் ஏற்பட உறுதியான தத்துவம் தேவை. மூன்றாம் மாறுதல் முதன்மையான சக்தியில் எழுகிறது. அது நெருப்பு, உஷ்ணம், ஒளி, மின்சாரம். நமக்கு அது தெளிவாகக் காணும் நிலையாகும். சக்தியின் ரூபங்களுக்கு தனித்தன்மை, முத்திரையுண்டு, எனினும்



அவை சக்தியாகவே இருக்க முயல்கின்றன. இதுவரை நிலையான ஜட உருவம் ஏற்படவில்லை. நான்காம் நிலையுண்டு. அது பரவும் தன்மையுடையது. இதுவே ஜடத்தில் முதலாக ஏற்பட்ட கவரும் நிலை. இந்நிலையை நீர் அல்லது திரவம் என்றனர். ஐந்தாம் நிலை ஒட்டக் கூடியது. இது திடம். மண். இவ்வைந்தும் பஞ்ச பூதங்கள். ஐந்து மூலப்பொருள்கள்.

ஜடம் ஓர் உருவமாக இல்லை. பல ரூபங்களில் உள்ளது. மரம் ஒரு வகை, மண் அடுத்த வகை, மலையும் கல்லும் வேறு, அட்டை, வைரம், பொன் என்ற பல ரூபங்களுண்டு. எல்லாப் பொருள்களும் இப்பஞ்சபூதங்கள் – 5 மூலப்பொருள்கள் – கலந்தவையே. எல்லா ஜடப்பொருட்களுக்குரியதும் இச்சட்டம். சூட்சுமப் பொருள்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். நம் புலன் உணர்வுகள் அனைத்தும் இந்த ஜடப்பொருள்களால் நிர்ணயிக்கப்படுபவை. சப்தத்தால் நாம் அதிர்வையும், அவற்றின் அலைகளையும் உணர்கிறோம். தொடு உணர்ச்சிப் பொருள்கள் ஒன்றையொன்று தொடுவதால் ஏற்படுகிறது. உலகில் உள்ள பொருள்கள் சக்தியின் சலனத்தாலும், அதிர்வாலும் ஆனவை. பார்வை ஒளியின் செயல். ஒளி, நெருப்பு, சூடு ஆகிய சக்திகளால் வடிவம் கொடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டது பார்வை. நான்காம் புலன் ருசி. ஐந்தாவது வாசனை. சக்திகள் அசைந்து, அலையாக நகர்ந்து ஒன்றையொன்று சந்திப்பதால் ஏற்படுபவையே புலனுணர்வு. தூய்மையான சக்தி தன்னைப் பல கட்டங்களில் மாற்றியமைக்கிறது. சக்தியின் ஆரம்பத்தையும், முடிவான புலனுணர்வான ருசியையும் இந்தியத் தத்துவ மேதைகள் இவ்வாறு இணைத்தனர். சாதாரணமான மனிதன் இந்த ரூபங்களைத் தன் உணர்வால் அறிகிறான். உணர்வு இவற்றை உறுதியானதாகவும், நிலையானதாகவும் காண்கிறது. எப்படி இவை அழியக்கூடிய தற்காலிகமானவை என ஆச்சரியப்படுகிறது. சுத்த சக்தி உணர்வுக்குப் புலப்படாதது. கையால் தொடவல்லதன்று, மனத்தால் நம்பமுடியாததும்கூட. அதுவே பிரபஞ்சத்தின் சத்தியம் என்கின்றனர். பெரிய மனிதனுக்கு முன்னோர் உரைத்தது தெளிவு தருகிறது. அவனுக்கு அது வேதவாக்கு.

நாம் சக்தி என்ன என்று கூறினோம். கட்டுரையின் தலைப்பு சித்-சக்தி. சித், ஜீவியம் என்றால் என்ன என்று கூறவேண்டும். வேறொன்றும் உண்டு. சக்தியின் இரு சலனங்கள் சந்திக்கின்றன. அவை உணர்வை எழுப்புகின்றன. எப்படி எனத் தெரியவில்லை. சாங்கியம் என்ன சொல்கிறது? அவர்களுடைய சிந்தனை ஆராய்ச்சியுள்ளது. சாங்கியம் என்றால் எண்ணுதல் என்று பொருள். பஞ்சபூதங்களின் பின்னால் இரு தத்துவங்கள் உண்டு என்றனர். அவை மகத், அகங்காரம் எனப்படும். மகத் என்பது சக்தி. அகங்காரம் என்பது பிரிவினைக்குரிய அகந்தை. அவை ஜடமான சக்திகளில்லை. சக்தி எனில் சாதாரணமானதன்று. பிரபஞ்சம் முழுவதும் பரவிய சக்தி. புத்தியை மூன்றாவதாகச் சேர்த்துக்கொள்கிறார்கள். இம்மூன்றும் சித் எனும் ஜீவியத்தில் செயல்படுகின்றன. இம்மூன்றும் சக்தியால் செயல்படவில்லை. ஆன்மாவால் - ஜீவனுள்ள ஆன்மா - அவை செயல்படுகின்றன. இம்மூன்று தத்துவங்களின் செயல்களும் ஆன்மாவில் பிரதிபலிக்கின்றன. இப்பிரதிபலிப்பை நாம் ஜீவியம் என்கிறோம்.

சாங்கியம் சொல்வதும், நாத்திகர்கள் கூறுவதும் கிட்டத்தட்ட ஒன்றுபோல் உள்ளது. சாங்கியம் இந்தியப் பரம்பரையில் முக்கியத் தத்துவம். உயிரும் ஜீவனுமில்லாமல் இயற்கையில் சக்தி செயல்படுகிறது என்பது அதன் கூற்று. இந்தியச் சிந்தனை கூர்மையானது. இந்த அளவு தத்துவ விளக்கத்தை மேற்கொண்டாலும், அதைக் கடக்கவில்லை. இந்த விளக்கத்தில் குறையிருக்கலாம், ஆனால் அதன் கருவில் உண்மையுண்டு. அதனால் பொதுவாக இவ்விளக்கத்தை ஏற்றனர். இயற்கைக்கு ஜீவன் உண்டா இல்லையா என்பது நம் கேள்வி. ஜீவனிருந்தாலும் இல்லாவிட்டாலும் இயற்கை என்பது சக்தி. சக்தி ரூபம் தாங்கி அசைவதே சட்டம். ரூபமற்ற சக்திகள் சந்தித்தால் ரூபம் எழுகிறது. ரூபம் ஒன்று மற்றதுடன் சந்திப்பது உணர்வை எழுப்புகிறது. இது நம் அனுபவம். நாம் இங்கிருந்து ஆரம்பிப்போம்.



விஞ்ஞானம் ஜடத்தை ஆராய்ந்தது. அதன் முறைகளும் ஜடமானவை. அதுவும் இதே முடிவுக்கு வந்துள்ளது. சில ஐயப்பாடுகள் மிஞ்சுகின்றன. ஞானமும், ஆத்மானுபவமும் விஞ்ஞானம் கூறுவதை ஏற்கின்றன. விஞ்ஞானமும், தத்துவமும் ஏற்பதை ஞானமும், ஆத்மானுபவமும் உறுதி செய்கின்றன. பகுத்தறிவுக்கு இம்முடிவு முழுதிருப்தி தருகிறது. அதன் அடிப்படைகள் இதன்மூலம் பூர்த்தியாகிறது. உலகம் என்பது ஜீவியத்தின் செயல் என்றோர் கருத்துண்டு. அதுவே உண்மை என்றாலும், செயல் என்பதுண்டு. செயல் எனில் சக்தி அசைய வேண்டும். சக்தியின் செயல்பாடாக இருக்கும். நம் சொந்த அனுபவத்தைக் கருதுவோம். அங்கும் செயல் உலகின் அடிப்படை எனக் காண்கிறோம். பழைய தத்துவங்கள் ஆதி சக்தியைப் பற்றிப் பேசுகின்றன. ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி எனபவை ஆதி சக்தியிலிருந்து எழுபவை. ஐக்கியத்தாலான சக்தியது. நாம் அசைவற்றுள்ள நிலையையும் அவை விவரிக்கின்றன. சலனம் இருபுறத்தால் சமநிலைக்கு வருவதே அசைவற்ற நிலைக்கு அவர் தரும் விளக்கம்.

சக்திக்கு அசைவுண்டு என்பதை நாம் ஏற்கலாம். அசைவே பிரபஞ்சத்திற்கு இயற்கை, அதனியல்பு எனவும் கொள்ளலாம். இரண்டு கேள்விகள் எழுகின்றன. இவ்வசைவு எழுந்தது எங்ஙனம்? அசைவு என்றுமுளது எனக் கூறலாம். அசைவே சிருஷ்டிக்கு அடிப்படை எனவும் கூறலாம். அப்படிக் கூறினால் அடுத்த கேள்வியில்லை. இது தவறு என ஏற்கனவே நிரூபித்துள்ளோம். சத் என்பதொன்றுண்டு. அது பிரம்மம் என நாம் நிரூபித்தோம். அது சலனத்தால் கட்டாயப்படுத்தப்படவில்லை என்றோம். பின் எப்படிச் சலனம் வந்தது? காரணம் என்ன? எப்படி இது சாத்தியமாயிற்று? இது என்ன புதிரான அசைவு?

ஆதி நாட்களில் இந்தியர் ஏற்ற முடிவு ஒன்றுண்டு. சக்தி என்பது சத்திற்குடையது என்பது அக்கருத்து. சிவனும், காளியும்; பிரம்மமும், சக்தியும் ஒன்றே. அவற்றைப் பிரிக்க முடியாது. சத்தில் உள்ள சக்தி நிலையாகவோ, ஓட்டமாகவோ இருக்கலாம். எப்படியானாலும், சக்தி

என்பது உள்ளது. சக்தி குறைவதில்லை, மாறுவதில்லை, அழிக்கப்படவில்லை. அசைவில்லாததால் சக்திக்கு எந்த மாற்றமுமில்லை. இவ்விளக்கம் அறிவுக்குகந்தது. நாம் காண்பவை விளக்கும் வகையிலுள்ளது. இதை ஏற்க நாம் தயங்க வேண்டாம். சத் என்பது ஒன்றே, அனந்தமானது. அப்படிப்பட்ட சத்தினுள் வெளியிலிருந்து சக்தி நுழைந்தது என்பதை ஏற்பது கடினம். இது பகுத்தறிவுக்கு ஏற்றதன்று. சக்தி என்பது முதலிலில்லை, பிறகு ஏற்பட்டது எனவும் நாம் கூற இயலாது. மாயை என்ற நோக்கில் இக்கருத்தை ஆராய்வோம். பிரம்மம் தானே தன்னை மாயையில் மறைக்கிறது என்பது மாயாவாதியின் விளக்கம். மாயை என்றும் உள்ளது, அது பிரம்மத்திலேயேயிருக்கிறது என்கின்றனர். அப்படியானால் கேள்வி என்ன? ஒரே ஒரு கேள்வியுண்டு. வெளிப்படுமா, இல்லையா என்பதே கேள்வி. சாங்கியம் சொல்வதென்ன? பிரகிருதியும், புருஷனும் என்றும் இணைந்துள்ளன என்கிறது. இயற்கை, ஆன்மா என அவற்றை அழைக்கிறது. சலனமும், அமைதியும் மாறி மாறி வரும் நிலைகள் பிரகிருதி, புருஷன் என்பவை என்ற விளக்கம் கொடுக்கிறது சாங்கியம்.

சக்தி சத்தினுள் இயற்கையில் இயல்பாகவுள்ளது. சக்திக்கு இருநிலைகள் உள்ளன. ஒன்று அமைதி; அடுத்தது சலனம். சக்திக்கு தன்னுள் செறிந்துறையும் திறனும், தன்னைப் புறத்தே, பரவவிடும் திறனும் அமைதியாகவும், சலனமாகவும் தோன்றுகின்றன. இதுவே உண்மையானால், ஏன் சலனம் ஏற்படுகின்றது என்ற கேள்வி எழாது. எப்படிச் சலனம் ஆரம்பிக்கிறது, சலனத்தை உந்துவது எது என்ற கேள்விகட்கு வழியில்லை. வித்தான இத்திறனே சீரான அலைகளாக மாறுகிறது. அது மாறிவரும் அமைதியும், சலனமுமாகும். ஒன்றை அடுத்தது தொடர்ந்து வரும். அல்லது சலனமற்ற சத்தில் என்றும் சக்தி செறிந்து தன்னிறைவு பெறும் நிலையாகவுமிருக்கலாம். மேலெழுந்தவாரியான சலனமாகவுமிருக்கலாம். அது ரூபம் பெறும் மாற்றமாகும். கடலின் மேற்பரப்பில் எழும் அலைகளாகும். நாம் பயன்படுத்தும் சொற்கள் நம் கருத்தைத் தெரிவிக்கவல்லதன்று. இது



மேலோட்டமான நிலை. தானே செறிந்து நிறையும் நிலையுடனிருக்கும் அசைவு என்றாலும், அதுவும் என்றும் உள்ளதாகும். அல்லது காலத்தால் கட்டுண்டு ஆரம்பம், முடிவு உள்ள சலனமாகவுமிருக்கும். மீண்டும் தானே எழும் சீரான அலைகளாகவுமிருக்கும். அப்படியானால், தொடர்ந்த அசைவால் அவை நிரந்தரமாக இல்லை; தொடர்ந்து மீண்டும் மீண்டும் எழுவதால், நிலையாகவுள்ளதாகும்.

சலனம் எப்படி ஏற்பட்டது என்பதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. ஏன் இச்சலனம் ஏற்பட்டது எனக் கூறவேண்டும். சக்தியில் சலனத்தின் பாங்கு இப்படி மாறுகிறது என்கிறோம். ஏன் மாற வேண்டும் என்பது கேள்வி. சத் என்பது செறிவுடையது, அது முடிவற்றது, மாற்றம், ரூபமற்றது. அப்படியானால் ஏன் அப்படியேயிருக்கக் கூடாது? சத் என்பது ஜீவனற்றது, ஜடசக்தியிலிருந்தே ஜீவியம் எழுகிறது என்று நாம் கொள்ளலாம். நாம் சக்திக்கு ஜடத்தன்மையில்லை எனத் தவறாகக் கொள்கிறோம். அது உண்மையானால், கேள்வியில்லை. இது சக்தியின் தன்மை எனக் கூறி முடிக்கலாம். ஏன் நாம் காரணம் தேட வேண்டும்? இயற்கையில் என்றும் இயல்பாக உள்ளது அது. காரணமோ, தேடுதலோ, முடிவான இலட்சியமோ தேவையில்லை. சுயமான சத், சுயமான சக்தி என்று கூறினால் அது எப்படி வந்தது எனக் கேட்பது தெளிவுள்ள செயலன்று. ஏன் சுயமாகச் சலனத்தைப் பெற்றுள்ளது எனக் கேட்பதும் பயனில்லை. அக்கேள்வியை நாம் கேட்க முடியாது. எவ்வகையாக சக்தி வெளிப்படுகிறது என்றறிய முற்படலாம். அதன் சலனத்தின் சட்டம், ரூபத்தின் சட்டம், பரிணாமம் இவற்றை அறிய முயலலாம். சத்தும், சக்தியும் இதன்படி ஜடமானவை. அதன் நிலைமை ஜடம், உந்துதலும் ஜடம். இரண்டும் அறிவற்றவை, ஜடமானவை. இதை நாம் ஏற்றால், பரிணாமத்திற்கு முடிவு, இலட்சியம் இருக்க முடியாது. ஆதியில் எந்த நோக்கமும் இருந்திருக்க முடியாது.

இதற்கு நேர் எதிரான கொள்கையை நாம் ஏற்போம். சத் என்பது ஜீவனுள்ளது என்போம். கேள்விகள் எழுகின்றன.

ஜீவனுள்ளதானாலும் தன்னுடைய சக்திக்கு உட்பட்டு இருக்கலாம். சக்தி வெளிப்பட வேண்டுமா இல்லையா என்று முடிவு செய்யலாம். தந்திர யோகிகட்கு பிரபஞ்சத்திற்குரிய கடவுளுண்டு. அது இவ்வண்ணமான தெய்வம். மாயவாதிகளும் அவர்கள் தெய்வத்தை சக்திக்கு – மாயை – உட்படுத்துகின்றனர். மாயைக்குட்பட்ட புருஷன் சக்தியால் ஆளப்படுகிறான் என்பது அவர் வாதம். நாம் பிரம்மம் என்று ஆரம்பித்தோம், பிரம்மம் அப்பாற்பட்டது, அனைத்திற்கும் அப்பாற்பட்டது என்றோம். எந்த சக்தியாலும் கட்டுப்படுத்தப்படாதது என்பதே நம் பிரம்மம். பிரம்மம் என்பது உயர்ந்தது, அளவு கடந்தது, சத் என்பது என்றோம். மாயை அல்லது சக்தி என்பது என்ன? பிரம்மம் பிரபஞ்சத்தில் தன் உருவங்களை எழுப்புவது மாயை, சக்தி எனப்படும். மாயை, சக்தி என்பவற்றிற்கு முந்தையது பிரம்மம். பிரம்மம் என்பது மாயையின் ஆதி, மாயையைக் கடந்த நிலை. மாயை தன் வேலையை முடித்த பின் பிரம்மத்தை அடைகிறது. நாம் கடவுள் என்று கூறுவது புருஷன், எதனாலும் கட்டுப்படாதது, எவற்றாலும் விவரிக்க முடியாதது. எதையும் பிரம்மம் நம்பியில்லை. அதன் உருவங்களையும் நம்பியில்லை. பிரம்மம் அதன் செயல்களாலும் கட்டுப்பட்டதன்று. அப்படிப்பட்ட கடவுளுக்கு அடிப்படையான சுதந்திரம் உண்டன்றோ? தன்னை சிருஷ்டியாக வெளிப்படுத்த வேண்டுமா, இல்லையா என்ற முடிவை அதுவே எடுக்கும் திறனுடையது. பிரகிருதிக்குட்பட்ட பிரம்மம் பிரம்மமாயில்லை. அது ஜடமான அனந்தம் என நினைக்கத் தோன்றுகிறது. பாத்திரத்தைவிட சக்தி வாய்ந்த எழுச்சியை அது தன்னுட்கொண்டிருக்கலாம். அது ஒரு சக்தியை வைத்திருக்கலாம். வைத்திருப்பதை அது அறியலாம். அச்சக்தி இதைவிட சக்தி வாய்ந்ததாக இருக்கலாம். பிரம்மம் அதன் இயற்கைக்குட்பட்டதென நாம் வாதிக்கலாம். இது பிரச்சினையைத் தீர்க்காது. அது நம் ஆரம்ப கொள்கைக்குப் புறம்பானது. நாம் சத் என்பது சக்தி என முடிப்போம். அது அமைதியான சக்தியாகவோ, அசையும் சக்தியாகவோ



அமையலாம். முடிவான சக்தி எனவும் கூறலாம். முடிவான ஜீவன் என்று கூற முடியாது.

அடுத்தாற்போல் சக்திக்கும், ஜீவியத்திற்கும் உள்ள தொடர்பை ஆராயவேண்டும். ஜீவியம் என்றால் என்ன? மனம் விழிப்பாக உள்ள நேரத்தை நாம் ஜீவியம் என்கிறோம். பெரும்பாலான நேரம் மனிதனுக்கு அவ்விழிப்புண்டு. தூங்கும் பொழுதும், திகைத்த பொழுதும், மருந்தால் மயக்கமுற்ற நேரமும் மனிதனுக்கு விழிப்பிருப்பதில்லை. இது மேலெழுந்தவாரியான உடல் உணர்வு. ஜட உலகத்திற்கு இவ்விழிப்பில்லை. ஏதோ ஒரு சமயம் இருப்பதுண்டு. ஜட வாழ்வுக்கு இது விலக்காக வருவது, இயல்பானதன்று. மனிதனுக்கு எப்பொழுதும் தவறாது இவ்விழிப்புண்டு என்று கூற முடியாது. எளிய மக்கள் அறியாமையால் நம்பும் கருத்து இது. தத்துவம் உயர்ந்தது. உலகம் எப்படி சிருஷ்டிக்கப்பட்டது என்பது அதன் கேள்வி. மனித நம்பிக்கை மேலெழுந்தவாரியான அர்த்தமற்ற நம்பிக்கை. நாம் அதைக் கருத வேண்டாம். நம் அன்றாட எண்ணங்கள் இதுபோன்ற கருத்துகளைக் கொண்டன. நம் வாழ்வும், செயலும், உறவும் இதைப் போன்றது. நம் தூக்கத்தில் உயிர் உண்டு. நாம் தூங்கும்பொழுது நம்முள் ஒன்று விழிப்பாக உள்ளது. மயக்கம், மருந்தால் மயக்கம், திகைப்பு ஆகிய நேரங்களிலும், அது நம்முள் விழிப்பாக உள்ளது. நாம் unconscious ஜீவியமற்ற நேரம் என்று இது போன்ற நேரங்களைச் சொல்கிறோம். அவை நம் உடலுடைய வாழ்வு. இதன் மூலம் நம் முன்னோர்கள் நம் ஜீவனுடைய அடிப்படை உண்மையைக் கூறினர். நாம் விழித்திருக்கும்பொழுது, தெம்பாக இருக்கிறோம். நாம் விழித்திருக்கும்பொழுதும், நம்முள் விழிப்பான பாகம் சிறு முனை போன்றது என்கிறார்கள். இது நம் ஜீவனில் மேலெழுந்தவாரியான பாகம். நம்மை முழுவதும் அறிய இவ்விழிப்பான பாகம் மிகச் சிறியது என்று முன்னோர்கள் கூறுகின்றனர். இதன்பின் அடிமனமும் ஆழ்மனமும் உள்ளன. நம் ஜீவனில் இவை பெரும்பகுதி. நம் ஜீவனின் சிகரங்களும், பெருமைகளும் அங்குள்ளன. அவற்றை எவரும் அளக்கவில்லை, ஆழங்காணவில்லை. இவற்றை அறிவது

சக்தியையும் அதன் செயல்களையும் அறிய பெரிதும் உதவும். நாம் ஜட உலகால் சூழப்பட்டுள்ளோம். நாம் கண்ணுக்கு முன்னாலிருப்பதை உண்மை என நம்புகிறோம். அடி மனத்தை அறிவதால் நம் வரையறை, சிறுமை மறைகின்றன.

பகுத்தறிவு பேசுகிறது. ஜடத்தில் ஜீவியமுண்டு என வலியுறுத்திக் கூறுகிறது. ஜடம் மாறி ஜீவியமாகிறது எனவும் கூறலாம். நம் உடலுறுப்புகளும், ஜீவியமும் பகுத்தறிவுவாதிக்குப் பிரிக்க முடியாத ஒன்றாகும். உடலுறுப்புகள் செயல்படுவதால் ஜீவியம் எழுகிறது, ஜீவியம் வெளிப்பட உறுப்புகளில்லை என்றனர். இது பரம்பரை நம்பிக்கை. புதிய அறிவு வேகமாகப் பரவுகிறது. புதிய அறிவு பழைய நம்பிக்கைகளை அழிக்கும். புது அனுபவமும், அறிவும் வளர்வதால் பழைய நம்பிக்கை ஆட்டம் காண்கிறது. பழைய விளக்கங்கள் தெளிவை இழக்கின்றன, பழைய விளக்கங்களை நிலை நாட்ட ஒவ்வொரு முறையும் அதிகச் சிரமப்பட வேண்டியிருக்கிறது. மனிதனுடைய சாதனை அவனது திறமையை மீறியது எனக் காண்கிறோம். அவன் நகர்த்தும் பாரமும், தலையில் தூக்கும் பாரமும் அவனது உடலின் எடையைவிட அதிகமாக இருப்பதுண்டு. நம் உறுப்புகள், புலன்கள், நரம்பு, மூளை எல்லாம் சேர்ந்து நாம் நிர்மாணித்த நகரங்களை நிர்மாணிக்கும் திறனுடையவை அல்ல. அணுசக்தியை வெளிப்படுத்தும் திறனவைகட்கில்லை. நம் சாதாரண எண்ணங்கட்கும், ஜீவியத்திற்கும், இவ்வுறுப்புகள் கருவிகளேயாகும். மூளை ஜீவியத்தை உற்பத்தி செய்கிறது. விபரீத நிகழ்ச்சிகள் சில உண்டு. அவற்றால் இதயம் போன்ற உறுப்புகள் தேவையில்லை என அறிகிறோம். இதயம் நிற்கலாம், ஆனால் உயிர் நீடிக்கும். மூச்சும் தேவையில்லை. மூளையில் உள்ள அணுக்களும் எண்ணத்திற்குத் தேவையில்லை. ஓர் இன்ஜினைச் செய்கிறோம். அது நீராவி அல்லது மின்சாரத்தால் இயங்குகிறது. நீராவி எப்படி உற்பத்தியாகிறது என்பதை இன்ஜின் செய்முறை சொல்வதில்லை. இன்ஜினால் நீராவி உற்பத்தியாகவில்லை. அதேபோல் நம்



உடலுறுப்புகள் நம் எண்ணங்களையோ, ஜீவியத்தையோ உற்பத்தி செய்யவில்லை. சக்தி முன்னே, கருவி பின்னால்.

இம்முடிவு ஏற்கப்படுமானால், பிரம்மாண்டமான கேள்விகள் எழுகின்றன. ஜடப்பொருள்கட்கு உயிருண்டா என்பது முதற்கேள்வி. தமஸுக்குப் பின்னால் மனமிருப்பதைக் காண்கிறோம். உயிரற்றவையிலும் நாம் மனம் செயல்படுவதைக் காண்கிறோம். ஜடப்பொருளுக்கு மனம் உண்டா என நாம் கேட்கலாம். அது ஆழ்மனமா? அது பிரபஞ்சம் முழுவதும் பரவியதா? மனத்தால் செயல்பட முடியவில்லை எனக் கூற முடியுமா? ஆழத்திலிருப்பதால், மேலே செயல்பட முடியவில்லை. தன்னை வெளிப்படுத்த தகுந்த கருவியில்லாததால், ஆழம் மேல்நிலைக்குத் தன்னைத் தெரிவிக்க முடியவில்லையா? ஜடத்தில் ஜீவியமில்லையா, அல்லது தூங்குகிறதா? பரிணாமக் கண்ணோட்டத்தில் அது ஆழ்ந்த தூக்கமாகும், தற்காலிகமான தூக்கமாகாது. மனிதர்களாகிற நாம் தூங்குவதே உதாரணம். இதிலிருந்து தூக்கம் ஜீவியத்தை ரத்து செய்யவில்லை என அறிகிறோம். ஜீவியம் உள்ளே ஓர் புள்ளியில் சேருகிறது. உடலுறுப்புகளால் புறச்சூழலுக்குப் பதிலளிக்க முடியாத அளவுக்கு ஜீவியம் உள்ளே போகிறது. புறத்தே பொருத்தமான கருவியில்லாமல், சத் தன்னையும், தன் இரகஸ்யத்தையும் வெளிப்படுத்த முடியவில்லை. உலகத் தொடர்பேற்கும் கருவிகளில்லை. புருஷன், ஜீவனுள்ள ஆத்மா ஒவ்வொரு பொருளிலும் உண்டு. எந்நேரமும் எல்லாப் பொருள்களிலும் விழித்துள்ளது புருஷன்.

இதுவே முடிவன்று. நாம் ஆழ்மனத்தைப் பற்றிப் பேசுகிறோம். இதன் பொருளென்ன? இது நம் மனப்பான்மையிலிருந்து வேறுபட்டதா? இது ஆழத்தில் மட்டும் செயல்படுமா? இது மனிதன் விழிப்பில் அறியாததா? நம் மனப்பான்மையே இதுவா? அதன் வீச்சு மட்டும் அதிகமா? அடிமனத்திற்கு ஒரு குணம் உண்டு. நம்மால் விளக்க முடியாத அளவுக்குத் திறனுள்ளது அடிமனம். அதன் திறன் பெரியது, அளவு கடந்தது. மனப்பான்மை என்பது விழிப்புக்குரியது.

அடிமனம் விழிப்பிலிருந்து அளவு கடந்து மாறுபட்டது. நாம் ஆழ்மனம் உண்டு என்று பேசினால், அதற்கெதிரானதும் உண்டு என்றாகும். அதுவே பரமாத்மா. மேலே பரமாத்மா (superconscient) கீழே ஆழ்மனம் (subconscient) உண்டென்றால் இடையே பல நிலைகள் இருக்க வேண்டும். நம் மனம் ஒரு நிலை. இது மேலே போகும் பொழுது தன் நிலையை உயர்த்துகிறது. உயர்ந்து பரமாத்மாவை அடைகிறது. அதைச் செய்வது அடி மனம். அதேபோல் அடி மனம் உள்ளே போய் ஆழ்மனத்தைத் தொடுகிறது. நாம் நம் நிலைகளை, பிராணன், உடல் என அழைக்கிறோம். அவை மனப்பான்மையின் பகுதிகள். இது உண்மையானால், தாவரத்திலும், உலோகத்திலும் சக்தியிருக்கலாம். நாம் அதையும் ஜீவியம் என்கிறோம். அது மனித மனப்பான்மை, விலங்கு மனப்பான்மையாக இருக்காது. இதுவரை நாம் ஜீவியம் என்ற சொல்லை மனித மனப்பான்மைக்கு மட்டும் பயன்படுத்தினோம்.

இது உண்மை. ஆராய்ந்தால், இது உண்மை எனத் தெரியும். நம்முள், பிராணனுண்டு. அது செல்லில் செயல்படுகிறது. தானே இயங்கும் செயல்களில் அது வெளிப்படுகிறது. அவசியமான காரியங்களை அது செய்ய உதவுகிறது. கவர்ச்சி, அதன் எதிர்ப்பை மனம் பொருட்படுத்துவதில்லை. தானே இயங்குபவை அவற்றை ஏற்றுக் கொள்கின்றன. இது விலங்குகளிலுள்ளது. விலங்குக்கு இது நம்மைவிட அவசியம். தாவரத்தில் இவ்வுணர்வு இயல்பாகவுள்ளது. சமீபத்தில் ஓர் இந்திய விஞ்ஞானி, தாவரத்தின் வினோதமான செயல்களை விஞ்ஞானமுறைப்படி விளக்கினார். தாவரம் சுருங்குகிறது, எட்டித் தாவுகிறது. அதற்கு வலியும் இன்பமும் உண்டு. தூங்கும், விழிக்கும். இவையெல்லாம் ஜீவியத்தின் செயல்கள். நாம் காணும்வரை இவற்றை மனப்பான்மை எனக் கூற முடியாது. மனத்தின் பகுதியான ஜீவியமிருக்க வேண்டும். அதைப் பிராணன் எனலாம். அதுவும் ஆரம்பத்தில் மனம் போலவே செயல்படும். ஆனால் அது அமைப்பில் வேறுபட்டது; வேறு வகையாகத் தன்னை அறிகிறது. அதுமட்டுமன்று. மேலே



பரமாத்மாவுள்ளது. அதன் அமைப்பு பரமாத்மாவுக்கேற்றது. அது தன்னைத் தனக்கேற்றவாறு அறியும். அதுவும் மனித மனத்திலிருந்து வேறுபடும்.

பல நிலைகளில் ஜீவியம் உள்ளது. இது தாவரத்துடன் முடிகிறது என்று கொள்ளலாமா? விலங்குக்குள்ள உணர்ச்சியின் பகுதி தாவரத்திலிருப்பதைக் காண்கிறோம். இது உண்மையானால், அடுத்ததும் உண்மையாக இருக்கவேண்டும். ஜடத்தில் வாழ்வின் சக்தியும், ஜீவியமுமிருக்க வேண்டும். அது ஜடத்திற்குப் புறம்பானதாக இருக்க வேண்டும்; ஜடத்துள் வெளியிலிருந்து நுழைந்து அதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்க வேண்டும். அது அடுத்த உலகத்திலிருந்து வந்ததா? வேறெங்கிருந்து வந்திருக்க முடியும்? அதுபோன்ற உலகங்களிருந்ததாக முன்னோர்கள் கூறுகிறார்கள். நம் உலகில் அவை வாழ்வையும், ஜீவியத்தையும் ஆதரிக்கலாம். உள்ளிருந்து எழும் அழுத்தத்தால் ஜீவியத்தை எழுப்புவதாக அமையலாம், ஆனால் ஜீவியத்தை உலோகத்தினுள் உற்பத்தி செய்ய முடியாது. உள்ளே முதலிலேயே இல்லாதது ஜடத்தினின்று வெளிவர முடியாது.

நாம் மனிதனிலுள்ள ஜீவியத்தைத் தாவரத்திலுமிருப்பதாகச் சொன்னோம். ஏன் அதுபோல் உலோகத்திலுமிருப்பதாகச் சொல்லக் கூடாது? ஏன் தாவரத்துடன் நிறுத்த வேண்டும்? உலோகம் அதிகமாக ஜடத்தன்மையுடையதென்பதால் நாம் நிறுத்துகிறோமா? நாம் தாவரத்துடன் நிறுத்த எக்காரணமுமில்லை. சமீபகால ஆராய்ச்சியில் புதிய விஷயங்கள் புலப்படுகின்றன. உலோகத்திலும் ஏதோ ஓர் அளவு உயிருண்டு என்கிறார்கள். உலோகத்திலும், மண்ணிலும் ஜீவியம் அடக்கி ஒடுக்கப்பட்டு ஜடமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். அது ஜீவியமாக இல்லாவிட்டால், ஜீவியமாக மாறக் கூடியதாக இருக்கலாம். ஆரம்பத்தில் அப்படித்தானே மனித ஜீவியம் எழுந்தது. தாவரத்தில் உயிருள்ளது என ஓரளவு தெரிகிறது. ஸ்ரீ அரவிந்தர் அப்படிக் கூறுகிறார். தாவரத்தில் உள்ளது பிராணன் எனலாம்.

ஆனால் ஜடத்தில் - உயிர் - ஜடமாகவேயுள்ளது. அதை ஜீவியம் என்று ஏற்றுக் கொள்வது கடினம். நமக்குப் புரியாததை, இல்லை என்பது நம் பழக்கம். மனிதனிலிருந்து தாவரம்வரை ஜீவியத்தைத் தொடர்ந்து வந்தோம். உலோகத்திற்கு வந்தபொழுது இல்லை என்று கூறுகிறோம். இடையில் வெளியிலிருப்பதைக் காண்கிறோம். உயிரும், வாழ்வும் எங்குமுள்ளது என அறிவோம். எங்கும் ஐக்கியமுண்டு, எல்லாம் ஒன்றே என நினைக்கும் உரிமை எண்ணத்திற்குண்டு. மற்ற எல்லா இடங்களிலும் இந்த ஐக்கியம் தென்படுகிறது. உலோகத்தில் மட்டும் அவ்வைக்கியம் இல்லை என்கிறோம். அதை முழுவதும் இல்லை என்று கூறுவதில்லை. அது மறைந்துள்ளது. ஐக்கியம் உண்மை என நம்புவதாகக் கொள்வோம். அப்படிக் கொண்டால், விஷயம் மாறும். அதை ஏற்றுக் கொண்டால், ஜீவியம் எங்கும் உள்ளது, உலோகத்திலுமுள்ளது என்று பொருள். அதை ஜீவனுள்ள புருஷன் என்று சொல்ல முடியாதிருக்கலாம். அதைப் பரமாத்மா என்று கூற முடியாது எனலாம். இருப்பினும், ஜீவனின் ஜீவனுள்ள சக்தியின் ஓர் உருவம் அது எனலாம். அதன் புறத்தோற்றங்கள் உலோகத்தில் வெளிப்படலாம். வெளிப்பாடு வெளிப்படையாக ஜடமாக இருக்கலாம்.

உலகத்திற்கு ஜீவியம் எனில் விழிப்புள்ள மனிதனின் மனப்பான்மை, உணர்வு. இது மேல் மனத்திற்குரியது. உலோகத்தின் ஆழத்தில் புதைந்து விழிப்போடிருக்கும் ஒன்றைப் பற்றி நாம் இப்பொழுது பேசுகிறோம். இக்கோணத்தில் பார்த்தால் ஜீவியம் என்ற சொல்லுக்குப் புதிய அர்த்தம் வருகிறது. இன்னும் அதை மனப்பான்மை என்ற பழைய அர்த்தத்தில் சொல்ல முடியாது. சிருஷ்டியில் தன்னை என்றும் அறியும் சக்தியாக அதைக் கூறுகிறோம். இப்படிப் பார்த்தால் மனித மனப்பான்மை நடுவில் அமைகிறது. கீழே உயிருக்கும், உடலுக்கும் அது பரவும். நாம் அவற்றை ஆழ்மனம் எனக் கூறுகிறோம். மனப்பான்மை பரமாத்மாவுக்கும் உயர்ந்து செல்லும். அது சத்திய ஜீவியமாகும். மனப்பான்மை என்றாலும், ஆழ்மனம் என்றாலும், பரமாத்மா



என்றாலும், எங்கும் உள்ளது ஜீவியம். அதைப் பொருத்தவரை எல்லாம் ஒன்றே. வெவ்வேறு நிலைகளில் ஜீவியம் வெவ்வேறு வகையாக வெளிப்படுகிறது. இந்தியர்கள் சித் என்றது இதுவேயாகும். சித் எனில் சக்தி, அது உலகை சிருஷ்டித்தது என்றனர். இது ஏற்கப்படுமானால் சக்தியின் ஐக்கியம் உண்மையாகிறது. விஞ்ஞானம் பேசுவது பகுத்தறிவுவாதம், நாத்திகவாதம். மனம் ஜடத்திலிருந்து வேறுபட்டதில்லை என விஞ்ஞானம் கூறுகிறது. இந்திய யோகப் பரம்பரையில் ரிஷிகள் அதை வேறு வகையாகக் கூறினர். மனமும், ஜடமும் ஒரே சக்தியின் வெவ்வேறு நிலைகள் என்றனர். ஒரே சக்தியை வெவ்வேறு அமைப்பில் காண்பதால் மனமும், ஜடமும் வேறுபட்டுத் தெரிகின்றன என்றனர். அதை சத் என்றும் கூறினர்.

இங்கு ஒரு கேள்வியை எழுப்பி விடையிறுக்க வேண்டும். ஜீவியத்திற்கும் சக்திக்கும் உள்ள தொடர்பை நாம் ஆராய ஆரம்பித்தோம். ஜீவியம் என்றால் தன்னையறியும் சத்துடைய சக்தி எல்லா ஜீவராசிகளிலும், ஜடப்பொருள்களிலும் விழிப்பாக இருப்பது எனக் கூறுகிறோம். இதை சித்-சக்தி எனலாமா? இந்தக் கேள்வியைக் கேட்டுப் பதில் சொல்வோம். ஜீவியம் எனில் சில முக்கியக் குணங்கள் இருக்க வேண்டும். புத்திசாலித்தனம், இலட்சியம், தன்னையறியும் பாங்கு, ஏதாவது ஒரு ரூபத்தில் அவையிருக்க வேண்டும். நமக்குத் தெரிய வேண்டும் என்ற அவசியமில்லை. இதன்படியும் நம் அனுபவம் பிரபஞ்சத்திற்குரிய சக்தியிருப்பதாகச் சொல்கிறது. விலங்கு வாழ்வைக் கவனிப்போம். அதன் இலட்சியம் அங்குத் தெளிவாகத் தெரிகிறது. விலங்கின் அறிவு நுணுக்கமானது, விஞ்ஞானரீதியில் தவறவே முடியாதது. நாம் விலங்கில் காணும் அறிவு, விலங்குக்கு அப்பாற்பட்டது. மனிதன் விலங்கின் இத்திறமையைக் கற்க முயன்றால் நெடுநாள் கற்று, நீண்ட நாள் பயில வேண்டும். கற்று முடிந்த பின்னும் விலங்குபோல் துல்லியமாக அவனால் செயல்பட முடியுமா என்பது சந்தேகம். அது அவனால் முடியாது. இது பொதுவான உண்மை. இவ்வுண்மை ஜீவனுள்ள சக்தி என விலங்கின் திறனை நிரூபிக்கிறது. இத்திறன் விலங்கிலும், புழு பூச்சியிலும்,

காணப்படுகிறது. உலகில் அதிகபட்ச புத்திசாலித்தனம் மனிதனில் வெளிப்படுவதை நாம் அறிவோம். விலங்கின் திறன் அதைவிட உயர்ந்தது. விலங்கின் குறிக்கோளும், எண்ணமும் அவற்றைவிடத் தெளிவானவை. அதன் உபாயங்களும், கருவிகளும், நிபந்தனைகளும் நாமறிந்த மனித அறிவைவிட உயர்ந்தவை. உயிரற்ற ஜடமான இயற்கையின் சக்தியில் நாம் இந்த அறிவின் சிறப்பைக் காண்கிறோம். மறைந்துள்ள உச்சகட்ட ஞானத்திற்கு ஓர் அடையாளம் உண்டு. தன் செயலினுள் மறைந்துள்ள ஞானம் என அதைக் கூறுகின்றனர். அதை நாம் விலங்கில் காண்கிறோம்.

புத்திசாலித்தனம், இலட்சியம், தெளிவு, திறமையுடைய சக்தி தன்னையறியுமானால், அதன் திறன் உச்சகட்டமானது. அது உண்மையானால், நாம் இயற்கையில் காண்பது அதற்கு எதிரான விரயம். ஏராளமான விரயத்தை எப்படி விளக்க முடியும்? இதற்குப் பதில் தேவை. நாம் பெற்ற மனம், மனித மனம், அளவுக்குட்பட்டது. பகுதியை மட்டும் காணவல்லது. எல்லா வகைகளிலும் வரையறுக்கப்பட்டது. இதைப் பகுத்தறிவு என்கிறோம். இதன் அறிவு இதனுடைய காரியங்களைச் சாதிக்கவல்லது. அத்துடன் தன் குறைகளைப் பிறர்மீது திணிக்கும் திறனுடையது மனம். தன் அறிவின் இயல்பையும், அளவையும், உலக சக்திகள் மீது ஏற்றிப் பேசுகிறது மனம். நாம் இயற்கையின் முழுமையைக் காண்பதில்லை. அதில் பகுதியைக் காண்கிறோம். நாம் காண்பதில் அர்த்தமற்றதாகத் தோன்றுவதை, விரயம் என்கிறோம். மேலும் ஓர் உண்மையுள்ளது. நம் செயல்களில் ஏராளமான விரயத்தை நாம் காண்கிறோம். நமக்கு, நம் கண்ணோட்டத்தில் அப்படித் தோன்றுகிறது. நமக்கு விரயம் என்பது உலகத்தின் காரியத்திற்கு உதவுகிறது. அதேபோல் இயற்கையில் விரயமாகத் தோன்றுவது பிரபஞ்சத்தில் காரியங்களைப் பூர்த்தி செய்கிறது. பிரகிருதி எனும் இயற்கை தன் இலட்சியத்தைப் பூர்த்தி செய்து கொள்கிறது. விரயமிருந்தாலும் இந்த இலட்சியம் பூர்த்தியாவதாகக் கூறலாம். ஸ்ரீ அரவிந்தர், “இந்த விரயமே



பிரபஞ்சத்தில் இறைவனின் காரியங்களைப் பூர்த்தி செய்கிறது” எனக் கூறப் பிரியப்படுகிறார்.

விலங்கு, தாவரம், உயிரற்ற ஜடப் பொருள்களில் நாம் ஓர் இலட்சியத்தை நோக்கிப் போகும் பாதையைக் காண்கிறோம். இது கண்மூடித்தனமான போக்கு எனத் தெரிகிறது. ஆனால் இப்போக்கு தன் இலக்கை விரைவாக உடனே அடைகிறது. இதுவரை விஞ்ஞானம், ஜடத்தையே எல்லாம் எனக் கொண்டது. உயிருள்ள வாழ்வும், ஜீவியமும் அதன் பார்வையிலில்லை என்று நாம் காண முடிகிறது. ஸ்ரீ அரவிந்தர் இப்போக்கை நியாய மனப்பான்மை என்று கூறுகிறார். ஜடத்திற்கு ஜீவனில்லை. ஜடத்தில் புத்திசாலித்தனமோ, அதன் சாயலோ இல்லை. ஜடத்தில் ஜீவியத்தைத் தாங்கும் பொருளுமில்லை. ஜடமான பொருள்களிலிருந்து ஜீவியம் எழுவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இது நைந்த பழங்கதை. உலகம் மாறிய நேரம் இதற்கெல்லாம் நேரமில்லை. மனித ஜீவியம் விலங்கின் ஜீவியத்தின் மற்றொரு ரூபம் என பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். மனத்தைவிடத் தாழ்ந்தவற்றில், இந்த ஜீவியம் மறைந்து காணப்படுகிறது. அது மனத்தில் வெளிப்படுகிறது. மனத்தைவிட உயர்ந்த ஜீவியமாக அது உருப்பெறும். உலகை நிர்மாணிக்கும் சக்தி ஜீவனுள்ள சக்தியாகும். இந்த ஜீவனுள்ள சக்தியை வெளிப்படுத்தும் சத் ஒரு ஜீவனுள்ள ஜீவன். இந்த ஜீவனுக்கு ஆன்மீகத் திறன் அதிகம். அது மறைந்துள்ளது. மறைந்துள்ள அவ்வான்மீகத் திறன்களுக்கு ஒரே இலட்சியம் வெளிவருவது. வெளிவரும்பொழுது ரூபம் பெற்று வருகிறது. அந்த ரூபங்கள் சிறப்புடையதாக இருக்க வேண்டுமென்பதே அதன் இலட்சியம். இவ்வுலகம் ரூபத்தாலானது என்பதால் ரூபத்தின் சிறப்பை நாடுவது அதற்கு இயல்பானதே.

✣✣✣

## அன்பர் கடிதம்

உயர்திரு ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களின் புத்தகங்கள் வாயிலாக அன்னையின் அருளை தினமும் அனுபவித்து வரும் பக்தை எழுதிக் கொள்வது. நான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் ஒரு சிறிய அறையில் (stores) அன்னையின் படத்தை வைத்து நானும் என்னுடன் வேலை பார்க்கும் இன்னொரு பக்தையும் வணங்கி வருகிறோம். அதற்குப் பக்கத்து அறையில்தான் நாங்கள் உட்காரும் அறை உள்ளது. அதாவது ஒரு பெரிய அறை இரண்டாகப் பிரித்துத் தடுக்கப்பட்டிருக்கும். அந்த இடத்தில்தான் (stores) எல்லாவிதமான packing சம்பந்தபட்ட பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். அங்குதான் gas cylinder வைக்கப்பட்டிருக்கும். அன்று சாயந்தரம் வெளியில் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. என்னுடன் factoryஇல் வேலை பார்க்கும் ஒரு பெண்மணி வந்து Madam, Tea இருக்கிறது, அதைச் சுட வைத்து உங்கள் இருவருக்கும் கொடுக்கட்டுமா? என்று கேட்டார். நாங்களும் சரி என்றோம். உடனே அவர் அந்த இடத்திற்கு (stores) சென்று அடுத்த நிமிடமே நாங்கள் இருக்கும் officeக்கு வந்தார். அப்போது என்னுடன் இருக்கும் இன்னொரு பக்தை சீக்கிரம் பாருங்கள் ஏதோ எரிகிறது என்றார். உடனே நான் விரைந்து சென்று பார்த்தேன், gas tube எரிந்து கொண்டிருந்தது. உடனே நான் அதை அணைத்துவிட்டுப் பார்த்தேன். சிலிண்டரிலிருந்து gas stoveக்கு செல்லும் tube இரண்டாகப் பிளந்து எரிந்து கொண்டிருந்தது. அதற்கு ஒரு நிமிடம் முன் அன்னைதான் அந்தப் பெண்மணியை எங்கள் அறைக்கு அனுப்பி வைத்து gasஐ வெடிக்கச் செய்யாமல் காப்பாற்றி, நான் வேலை பார்க்கும் அந்தக் கட்டிடத்தையும், அங்கு இருக்கும்



எல்லோரையும் காப்பாற்றினர்கள். நான் மெய்சிலிர்த்து அவர்களிடம் அன்னை அந்த அறையில் இருந்து உங்களை அனுப்பி நடக்கவிருந்த விபத்தைத் தடுத்து நம்மைக் காப்பாற்றியுள்ளார் என்று கூறினேன். அதை நினைக்க நினைக்க எனக்கு மெய் சிலிர்க்கிறது. அன்னை இருக்கும் இடத்தில் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது என்பதற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? இந்தக் கடிதம் மூலம் தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னைக்கு காணிக்கையாக ரூபாய் பத்து (10/-) இத்துடன் அனுப்பி உள்ளேன்.

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அதிகாரம், கட்டாயம், தண்டனை ஆகியவை பகவான் யோகத்திற்கு விலக்கு. எந்த நிலைக்குரிய கட்டுப்பாடும் சுயக்கட்டுப்பாடாகவே இருக்கும்.

*தானே கட்டுப்படாதது கட்டுப்பாடில்லை.*

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு நிகழ்ச்சிக்காகப் பிரார்த்தனை முன்போ, பின்போ இருந்தாலும் அது பலிக்கும். சூட்சுமத்தில் காலம் ஜட உலகக் காலத்துடன் பொருந்தாது.

*முடிந்ததையும் முந்திக் கொண்டு, சூட்சுமம் சரி செய்யும்.*

P.33 The weeping of Love, the quarrel of the Gods,
**அன்பின் அழுகுரல், தெய்வங்கள் போடும் சண்டை**

நட்சத்திரங்களை சிருஷ்டிக்கும் சக்தி ஒரு மணி நெல் உற்பத்தி செய்யத் தேவைப்படுகிறது. நமக்கு நெல் மணி உணவின் ஒரு சிறுபகுதி. இறைவனுக்கு அது ஒரு லோகம். லோகங்களை ரூபமாக சிருஷ்டிக்கும் இறைவன் சக்தியால் படைக்கிறான். ஞானம் ஞானமாக இருந்தால் லீலையில்லை. ஞானம், அஞ்ஞானமானால் கண்மூடி விளையாடமுடியும். மூடிய கண் திறப்பது ஞானம் அஞ்ஞானத்திலிருந்து வெளிவருவது. நாம் சண்டையாகக் காண்பதும், அழுகுரலாகக் கேட்பதும் இறைவன் ஆனந்தமாக அனுபவிக்கும் லீலா வினோதங்கள்.

- உலகம் வாயடைத்து, நிதானம் மறைகிறது.
- பரமாத்மா சாந்தியில் மூழ்கிய லோகம்.
- சூன்யத்தில் வானம் வளைந்து விலகுகிறது.
- எல்லையற்ற அனந்தம் மனத்திரை முன் மறையவில்லை.
- எண்ணத்தின் ஜோதியைக் கடந்த ஆன்மா.
- பதைக்கும் உள்ளத்தைத் தீண்டும் பரமனின் ஞானம்.
- சிந்தனை பரந்து செயலிழந்தது.
- எண்ணம் குரலிழந்து மடிந்தது.
- புதியதை ஜொலிக்கச் செய்யும் புதுமை.
- பிரம்மத்தின் அலை கடந்த தருணம்.
- பெருமுயற்சியின் சிறுபலன்.
- பெரும் பிரபஞ்சம் சிறு செயலாகும்.



- அறிய முடியாத அனந்தனின் அம்சம் பிரபஞ்சத்தையே மாற்றும்.
- நேரம் இறைவனின் எழுத்தில் கீரல்களாகும்.
- கருத்தைக் கடந்த காலம் கணத்துள் புதையும்.
- சென்றதையும், வருவதையும், உள்ளத்தில் உட்கொண்டது.
- சென்ற யுகத்தின் கதையை இன்று நடிப்பவர்.
- விண்டுரைக்க முடியாத விண்ணவரின் நேரத்துள் உறையும் அமைதி.
- அவசரத்தின் அலங்கோலம்.
- அலையென அலையும் மனத்தின் அலைகள்.
- அழியும் குமிழியில் அகப்படாதவன்.
- ஆத்மா பெற்ற அரசனின் விடுதலை.
- சுயம்பிரகாசமான சத்தியத்தின் உருவம்.
- நெடுநாளைய இன்பத்தை நெரிக்கும் நெருடல்.
- புண்ணியத்திற்குத் தோல்வி தரும் தலைவிதி.
- உடலின் காம இச்சை அனலாய் எரியும் வேதனை.
- இயற்கையின் பசிக்கு இரையான வருத்தம்.
- மண்ணிலிருந்து எழுந்த மனித உருவம்.
- சகதியில் உற்பத்தியான சகல சக்திகள்.
- காமவெறியின் கடும் வேதனை.
- காலத்தின் பிரவாகம் கக்கும் கர்மம்.

❖❖❖

## சரணாகதி என்ற முறையின் தத்துவமும், நடைமுறையும்

*(சென்னை மாம்பலம் தியான மையத்தில் 24.4.2002 அன்று திருமதி விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

- குறைந்த முயற்சியில் அதிகப் பலன் தருவது சிறந்த முறை.
- எதையும் செய்யாமல் எல்லாவற்றையும் பெறுவது சரணாகதி.
- இது உண்மையானால், இதன் தத்துவம் என்ன? இங்கு வெளிப்படும் சக்தி எது?
- எதுவுமேயில்லாமல் எல்லாமாக இருக்கும் பிரம்மதத்துவம் இது.
- இதன் சக்தி சலனத்தின் சக்தி. அது முழுமையான சலனம்.
- முழுச் சலனத்திற்கு முழு சக்தியுண்டு. நம் இலக்கை முழுமையாகப் பெறும் சக்தி அது.
- முழுமையாகத் தன்னையழித்து, முழுமையாகக் குறிக்கோளை ஏற்பது அது.
- குழந்தை தாயாரை நம்புவதும், நாம் சமூகத்தை ஏற்பதும் அது போன்றதே.
- நாமுள்ள இடத்தில் நாம் பகுதியான முன்னேற்றம் பெறுகிறோம். சொந்த முயற்சிக்குப் பலன் பகுதி.
- அடுத்த கட்டம் போக முயல்பவர் சொந்த முயற்சியால் போக முடியாது. அடுத்த கட்டம் உதவாமல் அதைச் சாதிக்க முடியாது.



- முடிவான கட்டத்தையடைய நம் முயற்சியில் நம்பிக்கையைக் குறைத்து அக்கட்டத்தின் உதவியைப் பெறுதல் அவசியம்.
- அதுபோல் மனிதன் எல்லாக் கட்டங்களையும் கடந்து செல்லலாம். சத் புருஷனையும் அதுபோல் கடக்கலாம். இதைச் சாதிக்க தன் முயற்சியில் நம்பிக்கையை முழுவதும் இழந்து, மேல்நிலை தடையின்றி நம்மில் செயல்பட அனுமதிக்க வேண்டும்.
- யோகம் அதைச் சரணாகதி என்று கூறும். முழுப்பலனுக்கு முழுச்சரணாகதி தேவை.
- பிரம்மத்திற்குத் தன்னை அர்ப்பணிப்பதே தத்துவம். எதுவுமேயில்லாதவன் எல்லாமாக மாறுவது பலன்.
- புதியதைக் கற்க முனையவேண்டும். முழுவதும் கற்றுக் கொண்டால் அது தானே செயல்படும். இது ஆழ்மனச் செயல்.
- மனம் திறமையால் நிறைந்த நேரம் ஆழ்மனம் செயல்படும். இது சரணாகதி போன்றது. மனம் ஆழ்மனத்திற்கு தன்னையறியாமல் செய்யும் சரணாகதியிது.
- நாம் வளர்ந்து சமூகத்தை ஏற்கும்பொழுது முயன்று அத்துடன் சேருகிறோம். நாளானால் சமூகத்துடன் இசைவாக இணைகிறோம். இதுவும் மனிதன் சமூகத்திற்குச் சரணடைவதாகும்.
- சமூகம் நம் தலைவன். நாளடைவில் நாம் கற்றதை (automatic) இயல்பாக்குவது சமூகத்தின் ஆழ்ந்த உணர்ச்சி. அதேபோல் பரமாத்மா இடைவிடாது நமக்குத் தெய்வீக வாழ்வை சூசகமாக அறிவிக்கிறார். ஆன்ம விழிப்புள்ளவன்

தன்னையறியாமல் சூசகமாக அறிவதற்குப் பதிலாக, பரமாத்மா கூறுவதைத் தெளிவாக முழுமையாக அறிய முயல்கிறான். இதுவும் மெதுவாக நடப்பது. இதற்குப் பதிலாக பரமாத்மாவே நம் வாழ்வை ஏற்று இயல்பாக நடத்தும்படி நாம் சரணாகதியை மேற்கொள்ள வேண்டும்.

❂ முனைந்து கற்பது காலத்திற்குரியது. சரணாகதி அதைத் துரிதப்படுத்தும், நாம் எந்த அளவு பரமனை அறிகிறோமோ, அந்த அளவு வேகம் அதிகமாகும். இது காலத்தைக் கடக்கும். சரணாகதி பூரணமடைய நாம் அடுத்த மூன்றாம் கட்டத்தை அடைய வேண்டும். அங்கு காரியம் க்ஷணத்தில் முடியும்.

❂ சரணாகதியை யோகத் தத்துவப்படி அறிய வேண்டும். எல்லா யோகத் தத்துவப்படியும் அறிதல் சிறப்பு. அவை,

- முரண்பாடு உடன்பாடு.
- ஜடமும், ஆன்மாவும் ஒன்றே.
- சத்தும், அசத்தும் சேர்ந்தது பிரம்மம்.
- பாதாளமும், பரமனும் பாமரனில் இணையும்.
- பிரபஞ்சமும், பிரம்மமும், மனிதனில் சேர்கின்றன.
- கண்டமான அகந்தை அகண்டத்தால் கிரகிக்கப்படுகிறது.
- அறிவு உணர்விலிருந்து விலகி ஞானமாகிறது.
- ஹிருதயச் சமுத்திரம் நம் வாழ்வை ஏற்கிறது.
- பிரகிருதி புருஷனின் சக்தி.
- ஆனந்தம் பொருள்களில் வெளிப்பட்டுப் பேரானந்தமாகிறது.



- உலகை உற்பத்தி செய்த மாயை தன்னை மறந்த ஆண்டவனுக்கு நினைவுபடுத்தி, அவன் தேடிய ஆனந்தம் தருகிறது.
- மனம் உடலுடன் கலந்ததிலிருந்து விழித்து, வாழ்விலிருந்து விடுபட்டு, தன்னிலிருந்தும் விடுபட்டு சத்திய ஜீவியத்தைக் காண்கிறது.
- அகந்தை கரைந்து சைத்தியப் புருஷனாகி, பிரபஞ்சம் முழுவதும் பரவி மீண்டும் சக்தியும் ஜீவியமும் சேர்கின்றன.
- ஜடம் சத்தின் ஆனந்தமான சச்சிதானந்தம்.
- ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைந்து பிரம்மமாகின்றன.
- எழுவகை அஞ்ஞானம் கரைகின்றன.
- மேல்மனம் உள்மனம்வழி அடிமனத்தையடைகிறது.
- இலட்சியம் எல்லா நிலைகளையும் கடந்து இருப்பதில் முடிகிறது.
- மூன்று திருவுருமாற்றங்கள்.
- புறம் அகமாகிறது.
- திருவுருமாற்றம் உலகை பூலோகச் சுவர்க்கமாக்குகிறது.
- பிரம்மத்திற்கு அஞ்ஞானம் சலிப்பு தருகிறது.

❂ இத்தனை முறைகளையும் ஒரே முறையில் காண்பது அம்முறையை முழுமையாக்கும். எந்த முறையிலும் சில தத்துவங்களே வெளிப்படும். எல்லாத் தத்துவங்களும் எல்லா முறைகளிலும் வெளிப்படாது. சரணாகதியினுள் எல்லாத் தத்துவங்களும், எல்லா முறைகளும் உள்ளன.

சரணாகதிக்கு மட்டுமே இந்தத் தகுதியுண்டு. எனவே அது முறை மட்டுமன்று, மூலமுமாகும்.

- ❂ சரணாகதி வாழ்வில் எங்கும் காணப்படுகிறது. ஆனால் எங்கும் முழுமையாக இல்லை.
  - உடல் நம் வேலையை எடுத்து இயல்பாகச் செய்வது சரணாகதியாகும்.
  - சமூகமே தன்னையறியாதது. மனிதன் சமூகத்திற்குள் அவனையறியாமல் கிரகிக்கப்படுகிறான். இதுவும் சரணாகதியே.
  - இவற்றை ஆயிரமாயிரம் பகுதிகளாகப் பிரிக்கலாம்.
  - பரமாத்மாவின் அந்தரங்க அழைப்பு இதைச் சேர்ந்ததே.
  - பிரம்மம் வாழ்வில் தன்னையிழந்து, தேடிக் கண்டுபிடித்து ஆனந்தம் பெற முயல்வதற்கு மனிதன் இறைவனுக்கு விரும்பிச் சரணடைவது உதவும்.

சரணாகதியின் பல்வேறு நிலைகள் *:*

- ❂ மனத்தில் எண்ணமாகவும், உயிரில் உணர்வாகவும், உடலில் உடலுணர்வாகவும் மனிதனிருக்கிறான்.
- ❂ சரணாகதி பூர்த்தியாக மனம், உயிர், உடல் சரணடைய வேண்டும். ஆத்மாவும் சரணடைய வேண்டும்.
- ❂ நம் கரணங்கள் சரணடையுமுன்னே, அவற்றின் செயல்கள் சரணடைய வேண்டும்.
- ❂ அச்செயல்கள் அக்கரணங்களிலும், அவற்றின் சூட்சுமப் பகுதிகளிலும் உள்ளன.



- ❂ எண்ணம் மனத்தின் செயல். சூட்சும மனத்தில் எண்ணம் impulse உந்துதலாகவுள்ளது.
- ❂ அதேபோல் உயிரும், உடலும் செயல்படுகின்றன.
- ❂ மனத்தின் எண்ணம், உயிரில் வேகமாகவும், உடலில் அசைவாகவும் எழும்.
- ❂ சூட்சும உடல், சூட்சும உயிர், சூட்சும மனத்தில் எண்ணம் முன் கூட்டி எழும். எழுபவை உந்துதல்களாகும்.
- ❂ எண்ணம் உலகத்திற்குரியது. வெளியிலிருந்து நம்முள் நுழைகின்றன.
- ❂ பிரபஞ்சத்திலும் மனம் உண்டு. எண்ணம் அங்கெழுந்து மனத்தையடைகிறது.
- ❂ மனத்திலுள்ளவை அனைத்தும் ஜீவனுக்குரியவை. ஜீவனின் 8 பகுதிகளும் - 4 கரணங்களும், அவற்றின் சூட்சுமப் பகுதிகளும் - பிரபஞ்சத்திலும் உண்டு. மனித நிலைக்கேற்ப அவை பிரபஞ்சத்தினின்று அவனை வந்தடைகின்றன. சமூகச் செய்திகள் நம் வீட்டிற்கு வருவது போன்ற செயல் அது.
- ❂ **உள்ளும் புறமும் நாம் பிரபஞ்சத்தை ஏற்குமிடத்தில் சரணாகதியை ஆரம்பிக்க வேண்டும். உள்ளுணர்வின் உந்துதல்கள், பிரபஞ்சத்தின் உந்துதல்கள் சந்திக்குமிடத்தில் அகமும், புறமும் ஒன்றாகும். அவை எல்லாச் சூட்சும லோகங்களிலும் பூர்த்தியாகி உந்துதல் எழாவிட்டால், மேல் மனத்திற்கு வாராவிட்டால் சரணாகதி பூர்த்தியாகும்.**
- ❂ இன்றுள்ள இடத்திலிருந்து இலட்சியத்தையடையும்வரை யாத்திரை மனித முயற்சி. அது மனிதத் திறமையின்

முயற்சி. முயற்சியும், திறமையும் சரணாகதியால் அன்னையை அடைவது அருள், பேரருளாவதாகும்.

சரணாகதியின் சாதனை :

- நாம் தேடாததைச் சாதிப்பதில்லை. நாம் அறியாததையும் அடைவதில்லை.
- தெரிவது சாதனைக்கு உதவாது, தடையாகும். தேடுவது எதிர்ப்பாகும்.
- சாதனைக்குத் தெரிவதும், தேடுவதும் அவசியம். அவை இரண்டும் தடை.
- சாதனை என்பது தீவிரமான தெளிவான ஆர்வம். ஆனால் அது பற்றற்றதாகும்.
- **நாம் நாடுவதை நமக்கு உற்பத்தி செய்துவிட்டு பிரம்மம் அகலும்.** தான் குறையாமல் நமக்குத் தேவையான அனைத்தும் தருவது பிரம்மத்தின் தன்மை.
- பிரம்மம் செய்வதைச் சரணாகதி செய்யும். அதனால்தான் பலன் அதிகம். பற்றற்று தீவிரமாக நாடுவது சரணாகதியின் நிபந்தனை.
- மனத்தின் எண்ணத்திலாரம்பித்து 6 கட்டங்கள் தாண்டி உடலின் சூட்சும உந்துதல்வரை சரணாகதிக்குரிய சட்டம் இதுவே.
- எண்ணம் முதல் (gross thought) உடலின் சூட்சும உந்துதல்வரை (subtle physical impulse) இந்த அளவுகோல் விரிந்து செயல்படும். இங்கெல்லாம் செயல்படுபவர்க்கு இதன் விபரம் தெளிவாகத் தெரியும்.



- எதைச் சாதிக்க வேண்டுமோ அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய். சமர்ப்பணம் உயர்ந்தால் சாதனை உயரும்.
- அடுத்த அடுத்த கட்டங்கட்குப் போகலாம். சாதனையும் உடன் வரும். முடிவான நிலையில் மனத்தின் உந்துதல் மனத்தில் எழும்பொழுது அது காத தூரத்திலிருப்பது தெரியும். **அது மனத்துள் நுழையும் முன் அதைத் தடுக்க வேண்டி சமர்ப்பணம் செய்ய வேண்டும்.**
- அலைகடல் போன்று அமைதி உள்ளே நுழையும். அது உள்ளிருந்தும் எழவல்லது. அதன்பின் சமர்ப்பணமில்லை. சாதிக்க வேண்டியது சாதனையைப் பற்றிச் செய்தி வருமுன் முடிந்துவிடும்.
- சமர்ப்பணம், சரணாகதி பலிக்காதவருக்கு முயற்சி மலை ஏறுவதுபோல்.
- முதல் தடையைக் கடந்தவருக்குச் சமர்ப்பணம், சரணாகதி தரும் வாய்ப்புகள் அனந்தம். இவை பெருஞ் சாதனைகள் ஆனாலும், முடிவான யோகமன்று.
- **தான் விரும்புவதை நாம் அறிவோம். பிறரைத் திருப்திப் படுத்த விரும்பலாம். நல்ல நேரம் மனம் தானே மலரும். எதுவானாலும், இவை சுபாவத்தின் ஒரு வெளிப்பாடு. அதைச் சமர்ப்பணம் செய்தால் ஒருவருக்கு அதைவிட உயர்ந்தது இல்லை.**
- இது பலிப்பது திருவுருமாற்றம்.
- சுபாவத்தில் பலிப்பது அபிப்பிராயம், முடிவு ஆகியவற்றிற்கும் பலிக்கும்.

- ❂ வசதியான வாழ்விற்கும், யோகச் சித்திக்கும் இடையில், மனம் நிறைந்த வளமான வாழ்வுண்டு. இது அர்த்த புஷ்டியானது, பெரியது. நான் கூறுபவை இவ்வாழ்வுக்குரியவை.
- ❂ சரணாகதி, சமர்ப்பணம் பலித்தவர்கள் உயர்ந்த மனவளத்தை நாடினால் என் கருத்துகள் பயன்படும்.
- ❂ சந்தோஷம், சமர்ப்பணமானால் பெரியவை நடக்கும். அந்த சந்தோஷம் நாம் பெறும் சுறுசுறுப்பல்ல. பேரானந்தப் பெரு வெள்ளத்தின் ஆரம்பமான ஆன்மீக ஆனந்தமாகும் *(*felicity*).*
- ❂ அடுத்த தாழ்ந்த கட்டத்தில் கவலை சமர்ப்பணமானால் குதூகலமாகும்.
- ❂ சிறிதளவு இதேபோல் வலி ஆனந்தமாகும்.
- ❂ சமர்ப்பணம் கனவிலும் பலித்து அதன் போக்கை மாற்றும்.
- ❂ கதையின் போக்கும் அன்பர் சமர்ப்பணத்திற்கு இசைவது அனுபவம்.
- ❂ சூட்சும லோகத்தில் காலத்தின் கதி பகுத்தறிவை ஏமாற்றும்.

குறைகளைச் சமர்ப்பணம் செய்வது *:*

- ❂ குறை என்பது குணக்குறை. சுலபமாக அழியக்கூடியதில்லை. நிரந்தரமாக நீங்குவது எளிதன்று.
- ❂ சமர்ப்பணம் பலிப்பவருக்கு, இதுவும் பலிக்கும்.
- ❂ குறைகளின் பெயர் நீண்ட பட்டியல். பெருமை, அவசரம், பயம், பேராசை, குறுக்கே பேசுவதென ஆயிரம் உண்டு.



- ❂ பெருமை, வீண் பெருமையைக் கருதுவோம். **வீண்பெருமை தம் குறை என அறிந்து, சமர்ப்பணத்தால் அதை விலக்க ஒருவர் முயன்றால், கீழ்கண்டவை அவர் முன் படிப்படியாகத் தோன்றும்.**
  - விரும்பி முயலும் சொந்த எண்ணம்.
  - நம்மை அறியாமல் பெருமையை நம்முள் நாடுபவை நம்மை மீறி எழுவது.
  - நாம் சும்மாயிருக்கும்பொழுது, பிறர் சொல்வதால் நாம் பழையபடி நடப்பது.
  - எண்ணத்தின்பின் உணர்ச்சி உந்துவது.
  - அதேபோல் உணர்ச்சியின் அடியில் உடல் தானே இயங்குவது.
  - எண்ணமும், உணர்வும், உடலசைவுகளும் அடங்கியபின் சூட்சும மனத்தில் எண்ணம் உந்தும்.
  - அதேபோல் உணர்விலும், உடலிலும் சூட்சுமத்தில் உந்துதல்கள் எழுவது.
- ❂ நம்முள் இத்தனைக் கட்டங்களில் எழுவனவற்றைக் காண்பது முதலில் அவசியம்.
- ❂ சமர்ப்பணத்தால் ஒவ்வொன்றாகக் களைவது அடுத்தது.
- ❂ சிரமப்பட்டு அகத்தால் வென்றதை, அர்த்தமற்ற புறச்செயல் அழிப்பது மனித சுபாவம்.
- ❂ இது நம் பங்கு. இதை நாமே செய்யவேண்டும். அன்னையிடம் இதையும் விட்டுவிட்டேன் என்று பேசக்கூடாது.

- கடைசிக் கட்டம்வரை வெற்றிகரமாக வந்த ஒருவர் கடைசிக்கட்ட உந்துதலைக் காண்பார் - it is the subtle physical impulse.
- இதுபோல் மனத்துள் தொலைதூரத்திலுள்ள உந்துதலைப் பொருட்படுத்தாததே வழக்கம். இந்த லேசான உந்துதலுக்கு முதற்கட்ட எண்ணத்தின் வலுவுண்டு.
- இந்தக் கட்டத்திற்கு வந்தவர்க்கு இது தெரியும். அவரால் அதை மறுக்க முடியும். அடுத்த கட்டத்தில் சமர்ப்பணமும் செய்ய முடியும்.
- அதைச் சமர்ப்பணம் செய்தால் அதுவே பெருமையின் முடிவு.
- தொலை தூரத்திலுள்ளவர்க்கு ஆள்மூலம் செய்தி அனுப்புவதை மாற்றி போனில் பேசுவது இந்தச் சமர்ப்பணம்.

சமர்ப்பணத்திற்குத் தேவையான தியானம் :

- ஸ்ரீ அரவிந்தர் அதை all inclusive concentration ஜீவ நிஷ்டை என்கிறார்.
- அதன் மையங்கள் இரண்டு. 1) தலைக்குமேல் 2) நெஞ்சுக்குப் பின்னால்.
- நம் நிஷ்டைக்கு மனம், நெஞ்சு, மூலாதாரம் மையங்கள்.
- ஒரு கரணத்தில் உள்ள நிஷ்டையிது.
- இம்மூன்று கரணங்களிலும் நிஷ்டை எழுந்தால் மையம் நகர்ந்து நெஞ்சுக்குப் பின்னால் போகும்.
- அதுவே ஸ்ரீ அரவிந்தருடைய இரகஸ்யம். அதை வெளிப்படையாக்கினார்.



- இந்த முறையை ஏராளமான சிறுபகுதிகளாகப் பிரித்து முன்பக்கங்களில் எழுதி முடியாத காரியத்தை முடிக்க முயன்றேன்.
- நெஞ்சுக்குப் பின்னால் நிஷ்டை என்பது ஆண்டவனை உணர்வால் ஏற்பதாகும். தலைக்கு மேல் தெரிவது ஆன்மீகம் அறிவதாகும்.
- The Life Divine புரிவது அந்த அறிவு, அது மனம் விரிவடைவதாகும். தலையே பெரியதாவதுபோல் தெரியும்.
- அன்னை முன் நிற்பதும், சமாதி தரிசனம் செய்வதும் நெஞ்சை அதுபோல் நிரப்பும். உயர்ந்த உணர்வெழுந்து உணர்வு செறிந்து பூரிக்கும்.
- க்ஷணமானாலும், இந்த அனுபவம் ரிஷிகள் அறியாதது.
- நந்தா இருமுறை 15 நாள் பிரதமரானார். 1½ வருஷம் வாடகை தரவில்லை என அவரை வீட்டைவிட்டுக் காலி செய்தனர். பிரதமராக உயர்வதும் வாடகை தாராது.
- சாதனைக்கு முயற்சி தேவை. முயற்சி சாதனைக்குத் தடை என்பது முரணானது.
- உடலாலானவன் உழைக்கிறான். உணர்வாலானவன், உற்சாகமாக உழைக்கிறான், அறிவாளி அறிவால் உழைக்கிறான். இது தவிர்க்க முடியாதது. அவசியம்.
- முயற்சி அவசியம் என்பதும், முயற்சியை முழுவதும் செலவிட வேண்டும் என்பதும் அவசியம்.
- திறமைசாலி சுறுசுறுப்பானால் அவன் சாதனை பலிக்கும். முயற்சியும், திறமையில்லாதவனுக்கில்லாத வாய்ப்பு இவனுக்குண்டு. அவனுக்குச் சரணாகதியுண்டு.

திறமையையும் சுறுசுறுப்பையும் சரணம் செய்தால் பலன் முன்னதாக வரும்.

- வேலையின் பலனைச் சரணம் செய்யலாம். வேலையைச் சரண் செய்யலாம். திறமையைச் சரண் செய்யலாம். நோக்கத்தைச் சரண் செய்யலாம். அதேபோல் வேலையின் ஜீவியத்தைச் சரண் செய்யலாம். ஜீவன் அடுத்தது.
- வேலையின் பலனை, வேலையிலிருந்து பிரிக்கத் தெரிய வேண்டும். அதேபோல் திறமையை வேலையிலிருந்து பிரிக்க முடிய வேண்டும். தொடர்ந்தால் வேலையின் ஜீவியத்தையும், ஜீவனையும் பிரித்துச் சரண் செய்ய முடியும்.
- இதைச் செய்ய முடியுமானால் வேலை, உரிய நேரத்திற்குக் காத்திராமல், உடனே முடியும்.
- ஒருவருக்கு 10 கட்ட உயர்வு காத்திருக்கும். ஒரு கட்டம் சமர்ப்பணத்தால் உடனே முடிந்தால் 30 ஆண்டில் முடிய வேண்டிய 10 கட்டங்களும் அதேபோல் முடிக்கலாம்.
- 30,000 ஆண்டில் பிறக்க இருக்கும் சத்திய ஜீவன் 30 ஆண்டில் பிறப்பான் என பகவான் கூறுவது இம்முறை. ஜீவன், ஜீவியம், சக்தி, ஆனந்தம் ஆகியவற்றை நாம் சரண் செய்யவேண்டும் என்கிறார்.
- சரணாகதிக்கு இத்திறன் எப்படி வருகிறது? இதன் தத்துவம் என்ன?
- ஜடத்திலிருந்து பிரம்மத்திற்குப் போகும்பொழுது ஒவ்வொரு குணமாக விலகி ரூபம், சக்தி, அறிவு, ஞானம் - முடிவில் பிரம்மம் எந்தக் குணமுமில்லாதது என்று அறிகிறோம்.



- சரணாகதி ஒவ்வொரு திறமையாக விட்டுவிடுகிறது - வேலையின் பலன், வேலை, திறமை, நோக்கம், ஜீவியம் - முடிவில் பிரம்மம்போல் எதுவுமில்லாமலிருக்கிறது. சரணாகதி பிரம்மத்தைப் பின்பற்றுகிறது.
- சரணாகதி என்ற முறையின் தத்துவம், பிரம்மத்தின் தத்துவம்.
- சரணாகதியில் சமர்ப்பணம் முடிகிறது.
- எண்ணத்திலாரம்பித்த சரணாகதி, உணர்ச்சியைக் கடந்து, உடல் உணர்வுக்குப் போய், சூட்சும உலகில் மீண்டும் எண்ணம், உணர்வு, உடலுணர்வைச் சரணம் செய்யும் பொழுது பூர்த்தியாகிறது.
- எந்த விஷயத்திலாவது சரணாகதி இதுபோல் பூர்த்தியானால், அவருக்கு அடுத்தடுத்த கட்டங்களுண்டு.

✣✣✣

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

“நல்லாயிருக்கு” என மனிதன் சொல்லும்பொழுது, அவன் உள்ளத்தின் ஆழத்தைத் தொடுகிறது எனப் பொருள். அதை அழிக்க அவன் வெட்கப்படுகிறான்.

*உள்ளத்தைத் தொடுவது உயிருக்கு உயிரானது.*

## அபரிமிதமான செல்வம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

குறைவாகச் சம்பாதிப்பவன் அதிகமாகச் சம்பாதிப்பது அவனுக்கு அதிக வருமானம். சமூகத்தில் உள்ள பணத்தின் அளவு அதனால் மாறாது. சமூகத்தில் உள்ள பணத்தின் அளவு பெருகுவது சமூகத்தின் வருமானம் அதிகரிப்பதாகும். அதையே பணம் பெருகுவது எனலாம்.

- ✲ என்றும்போல் வாழ விரும்புபவர்க்கு அதிக வருமானத்தால் பெரும் பலனில்லை.
- ✲ முன்னேற விரும்புபவன் முன்னேற்றத்திற்குரிய அதிக சக்தியை உற்பத்தி செய்வான். அதிக சக்தியை உற்பத்தி செய்ய லிமிட் கிடையாது. சக்தி பணம், அதிக சக்தி அதிகப் பணம். அவனால் அளவுகடந்த பணத்தை உற்பத்தி செய்ய முடியும்.
- ✲ பணம் சரக்கன்று. சரக்குக்குப் பயன் உண்டு. வேறெதுவும் கிடையாது. **பணம் சமூகத்தை மாற்றும் கருவி. எந்தச் சரக்காலும் சமூகத்தை மாற்ற முடியாது.**

இன்றுவரை உலகில் பணம் பெருகியுள்ளது. இது நம்மையறியாமல் நடந்தது. கல்வி 1900வரை தானே பரவியது. அதன்பின் உலகம் கல்வி முக்கியம் எனக் கருதி முயன்று கல்வியைப் பரப்பியது. தானே நடந்தது (unconscious) நாமே முனைந்து நடந்தால் (conscious) அளவு கடந்து பெருகும். இதுவரை தானே பெருகிய பணத்தை இனி நாமே முனைந்து பெருக்க முயன்றால், பணம் பெருகுவதற்கு அளவில்லை.

மனிதன் முன்னேறியுள்ளான். உழைத்தவன் இன்று சிந்திக்கின்றான். உடலிலிருந்து அறிவுக்கு முன்னேறியுள்ளான் என்று கொள்கிறோம். இந்த முன்னேற்றம் உண்மை என்றாலும், இது பூர்த்தியாகிவிட்டதா? இதனால் பெறவேண்டிய முன்னேற்றத்தில் நாம் இதுவரை பெற்றது சிறு பங்கு. மிகச் சிறிய பங்கு. இது உடலுக்கும், அறிவுக்கும் மட்டும் உள்ள நிலையில்லை. கார் வந்து



120 வருஷமாகிறது, போன் வந்து 140 வருஷமாகிறது. இரயில் வந்து 180 வருஷமாகிறது. இவை மேல் நாட்டார் நமக்குக் கொடுத்தது. கல்வி 1000 ஆண்டிற்கு முன் தெரிந்தது. கலை அது போல் நாம் முன்னரேயறிந்தது. குடும்பம் அதற்கு முன் ஏற்பட்டது. நிலத்திற்கு உரம் 60 வருஷமாக உள்ளது. இன்ஸூரன்ஸ் நாட்டில் 100 ஆண்டாகப் பழக்கம். சத்தியம் ஏற்பட்டு எவ்வளவு நாளாகிறது? இவற்றையெல்லாம் நாம் முழுவதும் பயன்படுத்துகிறோம் எனக் கூற முடியுமா? நாட்டின் கோணத்தில் பார்த்தால் இவற்றை 30% முதல் 1% வரைப் பயன்படுத்துகிறோம். போனும், கல்வியும், மருந்தும், நாணயமும் இனி ஏராளமாகப் பரவ இடம் உண்டு. அதேபோல், நாம் பணத்தை ஆயிரமாயிரமாண்டாக அறிவோம். அதை முழுவதுமாக இன்னும் அறியவில்லை.

**பணத்தை நாடு பெருக்க முனைந்தால் ஏராளமாகப் பெருக்கமுடியும். அதற்கு முடிவில்லை.**

கல்விக்குத் தடையிருந்த காலம் உண்டு. இனி அது இல்லை. லைப்ரரி என்பது பரவி வரும் காலம். தினசரிப் பத்திரிகைகளும், வார இதழ்களும், எளிய புத்தகங்களும் ஏராளமாக வெளிவருகின்றன. Internet கல்வியை உலகில் எங்கிருந்தும் பெறலாம் என்ற நிலையைத் தருகிறது. எந்தக் கல்லூரியிலும், எந்த நாட்டு கல்லூரியிலும் எவரும் பயிலலாம் என்பது இன்றைய நிலை.

**படிக்க அளவில்லாத வாய்ப்புண்டு.**

மனத்திற்கு இரு பகுதிகள் உண்டு. ஞானம், உறுதி எனப்படும். கல்விக்குரியது ஞானம். பணத்தை உற்பத்தி செய்வது உறுதி. அளவில்லாமல் படித்து ஞானத்தை உற்பத்தி செய்யமுடியும் என்றால், அளவில்லாமல் உறுதி பெருகும். இவை கூறுவது,

**அளவில்லாமல் பணம் உற்பத்தியாகும்.**

மனம் ஜடத்தை உற்பத்தி செய்தது என்பது ஸ்ரீ அரவிந்தம். வாழ்வு ஜடத்தின் பகுதி. பணம் வாழ்வில் கடுகளவு, மனம் பணத்தை

உற்பத்தி செய்ய முனைந்தால், அதற்களவில்லை. மனிதன் தெய்வமாவது யோக இலட்சியம். ஸ்ரீ அரவிந்தரது சிஷ்யர்கள் கடவுளாகாவிட்டால், யோகத்தில் தோல்வியடைந்தவராவோம். குறைந்தபட்சம் பணத்தையாவது அபரிமிதமாக உற்பத்தி செய்து யோகத்தில் தோல்வியை ஏற்கலாம்.

இந்தச் சட்டம் பணத்திற்கு மட்டும் உரியதன்று. அளவுகடந்து பெருக்கும் அனைத்திற்கும் உண்டு. நாம் அளவு கடந்து (infinite) பெருகுவதைச் சில விஷயங்களில்தான் பார்க்க முடிகிறது. அப்பெருக்கம் உள்ள இடங்களிலெல்லாம் காண்பதில்லை. Internet உம்., e-mailம் ஒரு நாளைக்கு 10 லட்சம் செய்திகளை 100 கோடிச் செய்திகளாக மாற்றியது. விமானப் பயணம் அதுபோல் வளர்கிறது. கலைக்களஞ்சியத்தைப் படிப்பவர் எண்ணிக்கையும் அதுபோல் வளர்கிறது. இவை வளர்ச்சியின் முடிவுக்கு முன்னுள்ள கட்டங்கள். அதைக் கடந்து போனால் அபரிமிதம், அனந்தமாகும். பணவளர்ச்சியை நாம் அதுபோல் தொடரலாம்.

வாழ்வு, காலத்தில் ஏற்பட்டது. நவீனச் சாதனங்கள் காலத்தைச் சுருக்குகின்றன. காலம் சுருங்கினால் வாழ்வு பெருகும். வாழ்வு பெருகினால் பணம் பெருகும். இதன் பலனை அடைபவர் பலர். அவர்கட்கு என்ன நடக்கிறது எனத் தெரியாது. 55 வயதில் ஓய்வு பெற்றவர் மேலும் 10 வருஷமிருப்பதில்லை. அது அரிது. அமெரிக்காவில் ஓய்வு பெற 65 வயதாக வேண்டும். 20 வருஷம், 25 வருஷம், 30 வருஷம் என சர்வீஸுண்டு. 45 வருஷ சர்வீஸும் உண்டு. 20 வருஷம் வேலை செய்து ஓய்வு பெற்றவர் 85 வயதில் 20 ஆண்டு பென்ஷன் பெறுகிறார். நிலைமை மாறுகிறது. 20 ஆண்டு சர்வீசில் பெற்ற தொகையை விட 20 ஆண்டு பென்ஷன் தொகை பெரியதாக இருக்கிறது. நிலைமை மாறி சம்பளத்தை விடப் பென்ஷன் அதிகமாக வருகிறது. சமூகம் காலத்தைச் சுருக்குவதால் பென்ஷன் அதிகமாக வருகிறது என்பதை விளக்குவது கடினம்.

*தொடரும்....*

❖❖❖



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

அண்ணன் - பெற்றோர் விவரம் தெரிந்தவர்கள். அதிகம் படித்தவர்கள். அன்பர்கள். ஏற்கனவே இப்பாதையில் செல்பவர்கள். அவர்களே இச்சட்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். சொல்லிப் பார்.

தம்பி - முதல் சட்டத்தில் தோல்வி. அறிவை நம்பாதே, ஆன்மாவை நம்பு. இரண்டாம் சட்டம் இவர்கள் பின்பற்றுவதாக இருக்கும். சௌகரியத்தைத் தேடாதே. இவர்கள் சௌகரியத்தைத் தேடுவதில்லை என்றாலும் அன்னை கூறுவது உடலை விழிப்புறச் செய்வதற்கல்லவா? உடல் விழிப்புறும் அளவு சௌகரியத்தைத் தேடாமலிருக்க முடியுமா?

அண்ணன் - கடைசி 4 சட்டங்களை (உண்ணும் முன்னும், உறங்கும் முன்னும், பேசு முன்னும், செயல்படு முன்னும் சமர்ப்பணம் செய்) இவர்கள் குழந்தை விஷயத்தில் பின்பற்றினால் இந்த முயற்சியை ஆரம்பிக்கலாம். அதற்கு நல்ல பலனிருக்கும். சௌகரியத்தைத் தேடாதே எனில் பொதுவாக அசௌகரியத்தைத் தேடு என நினைப்பார்கள். இங்கு விசேஷம் என்னவென்றால் உடலை அதன் பழக்கப்படி அனுமதிக்காதே. முக்கிய உதாரணத்தைச் சொல்கிறேன். தியானம் செய்ய பூஜை அறையில் தரையில் உட்கார்ந்தால் தியானம் வரும். 4 பேர் நாற்காலியில் உட்கார்ந்து தியானம் செய்ய வேண்டுமானால், “ஏன் பூஜை அறையில் தரையில் உட்காருவோமே” என்று நினைக்கிறோம்.

தம்பி - தரையில் உட்கார்ந்து தியானம் செய்வதுதான் தியானம்.

அண்ணன் - கவனிக்க வேண்டியது என்ன? இது ஒரு பழக்கம். நாம் பழக்கத்தைப் புனிதமாக்கிவிட்டோம். எனக்குப் பழக்கப்படிச் சௌகரியமாக இருக்கிறது என்று சொல்வதை நாம் தரையில் உட்கார்ந்தால் தியானம் வருகிறது என்கிறோம்.

தம்பி - சூட்சுமம்தான் முக்கியம். பழக்கத்தின் பேரால் நடக்காதே. வேலைக்குரியவற்றை ஏற்றுக்கொள் என்பதே கரு அல்லவா? இப்படிப் பார்த்தால் காபி சாப்பிடுவது பழக்கம், வேண்டியவரைப் பார்த்துச் சிரிப்பது பழக்கம், ஏன் தியானமே ஒரு பழக்கம் என்பதால்தான் அன்னைக்குத் தியானம் பிடிக்கவில்லை.

அண்ணன் - எந்தச் சட்டத்திலும் சட்டத்தைவிட அதனுள் கருவான நுணுக்கம், சூட்சுமத்தைத் தெரிந்து பின்பற்ற வேண்டும். பணம் வசூல் செய்யாமலிருப்பது அன்னை சட்டம். அதுவே நம் சுபாவத்திற்கு வசூல் பிடிக்கவில்லை என்றால், வசூல் செய்யாதது சுபாவத்தைப் பின்பற்றுவதாகும்.

தம்பி - அப்படிப்பட்டவர் வசூலுக்குப் போக வேண்டுமா?

அண்ணன் - அப்படியில்லை. நாம் எதைப் பின்பற்றுகிறோம்? சுபாவத்தைச் சௌகரியமாகப் பின்பற்றினால் அது தவறு.

தம்பி - அடுத்த சட்டம் அதைவிடக் கடினம். "பிடிக்கும் என்பதால் செய்வதைவிட, உனக்கு அமைந்த



கடமைகளை விருப்பமாகச் செய்". இதைப் பின்பற்ற நாம் தலைகீழாக மாறவேண்டும்.

அண்ணன் - நமக்குப் பிடித்த வேலைகள் சமயத்தில் அன்னைச் சட்டமாக இருக்கும். நாம் நமக்குப் பிடித்தது என்பதால் செய்துவிட்டு "Mother's Grace" அருள் என்போம்.

தம்பி - நாலு பேரோடு சுமுகமாகப் பழகுபவருக்கு ரிஸப்ஷன் வேலை கொடுத்தால் அருள் என்று சொல்கிறோம். அதையும், நமக்குப் பிடிக்கிறது என்று செய்வதைவிட இந்த வேலையில் அன்னையை வெளிப்படுத்த - சமர்ப்பணம் செய்ய - முயலவேண்டும். அடுத்த சட்டம் "பிறரைக் குறை கூறாதே". இப்பெற்றோர்கள் ஏற்கனவே இப்படித்தானிருக்கிறார்கள். அடுத்தது "ஒவ்வொரு நிமிஷமும் முன்னேற முயல வேண்டும்" இதுவும் இவர்கள் பின்பற்றும் சட்டம்.

அண்ணன் - அது சரி. அதாவது இப்போதைக்குச் சரி. இந்தச் சட்டம் ஏன் ஏற்பட்டது? பழக்கம் ஏற்படக்கூடாது என்று இது கூறுகிறது. இவர்கள் பள்ளியில் உயர்ந்த முறையைப் பின்பற்றிப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். இது நாளாவட்டத்தில் பழக்கமாகும். அது கூடாது. பிறகு பார்க்கலாம். அடுத்த சட்டம் இவர்களுக்குத் தெரியாது. "புறநிகழ்ச்சிகள் அகவுணர்வைப் பிரதிபலிக்கும்".

தம்பி - அதை ஏற்றுக் கொண்டால், நமக்குப் பயித்தியம் பிடித்துவிடும். இவர்கள் பள்ளியிலிருந்து 7,8 குழந்தைகளை எடுத்துக் கொண்டு போன பெற்றோர்கள், இவர்களைக் குறை கூறினர். நம் சட்டப்படி, நம் மீது பிறர் குறை கூறினால், நமக்குப்

பிறர் மீது குறையிருக்கிறது எனப் பொருள் என எடுத்துக் கொள்ளவேண்டும். அதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம். இது பெரிய சட்டம்.

அண்ணன் - மற்ற 4 சட்டங்களும் சமர்ப்பணம். அதை மேற்கொண்டால் அது யோகம். முதலில் குழந்தையைச் சமர்ப்பணம் செய்ய ஆரம்பித்தால் பெரும் பலன் தெரியும். பிறகு எல்லாவற்றையும் சரி செய்யலாம்.

தம்பி - T.V. வியாபாரி கடையை மூடவேண்டும் என்றாரே. அவர் பிழைத்துக் கொண்டார். அவர் இப்பொழுது அன்னையைக் கடைக்கு அனுப்புகிறார். வியாபாரம் 15% அதிகமாயிருக்கிறது என்றார்.

அண்ணன் - அவர் 15%க்குச் சந்தோஷப்படுகிறார். அதைக் காப்பாற்றுவது கடினம். அதைச் செய்துவிட்டு நம்மைக் கூப்பிட்டால் மீதி 85%ஐயும் அதிகப்படுத்திக் கொடுக்கலாம்.

தம்பி - இப்பெற்றோர் அன்னையை அனுப்புவதை ஏற்றுக் கொண்டால், என்ன செய்ய வேண்டும்?

அண்ணன் - அது உயர்ந்த முறை. 15% இல்லை, 15 மடங்கு பலன் தரும் முறை. இப்பெற்றோர் மிகவும் உயர்ந்த பழக்கங்களுடையவர்கள். Typical Indians. நம் நாட்டுக் கலாச்சாரம் அறிந்தவர்கள். இவர்களுக்கு அன்னையை அனுப்பும் முறை ஏராளமாகப் பயன்படும். ஆனால் இவர்களுக்கு அன்னை என்றால் என்ன? She is a consciousness அன்னை என்பது ஜீவியம் என்று புரிந்தால், அதை மனதால் ஏற்றுக்கொண்டால், இவர்கட்கு முறையே தேவையில்லை.



தம்பி - குழந்தை பிரபலம் அடைவது அப்புறமிருக்கட்டும். அற்புதமாகக் குழந்தை மாறிவிடும். அமைதியும், ஆனந்தமும் ஊற்றெழும் குழந்தையாகிவிடும். அன்னையை அதுபோல் ஏற்பார்களா? குழந்தை அன்னையை ஏற்குமா என்பதே முக்கியம். குழந்தைக்காக எதுவும் செய்யக்கூடிய பெற்றோர் என்பதால், அவர்கள் ஏற்கலாம்.

அண்ணன் - மனிதத் தன்மை அரிது. மனிதத் தன்மையைத் தெய்வத் தன்மையாக ஏற்கும் யோகம் இது. குழந்தை மேலுள்ள பாசம், அன்பாக மாறினால், அதனுள் எல்லாம் அடக்கம்.

தம்பி - அது ஏற்பட நம்முள் அன்பு (divine love) உற்பத்தியாக வேண்டுமே. அன்பு என்றால் நம் குழந்தைக்கு மட்டுமல்லவே, அனைவருக்குமாயிற்றே. அது ஏசு, புத்தர் நிலையாயிற்றே.

அண்ணன் - அன்னை நம்மையெல்லாம் கடவுளாகச் சொல்கிறார். அதனால் அதை நம்மிடம் எதிர்பார்க்கிறார். அன்பர்கள் குறைந்தபட்சம் அன்பு செலுத்த வேண்டும்.

தம்பி - கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. பின்பற்ற வழியுண்டா?

அண்ணன் - அன்னையை consciousness ஜீவியம் என அறிந்து ஏற்றுக்கொண்டால், நெஞ்சில் உள்ள பாசம் அன்பாக மாறும்.

*...தொடரும்*

## புலன்களுக்குப் புலப்படாதது

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

இல. சுந்தரி

அன்றும் அப்படித்தான். வீட்டுப்பாடம் எழுத பாட்டியின் முன் (ஸ்ரீ அன்னை திருவுருவப்படத்தின் முன்) உட்கார்ந்து கொண்டாள். பாட்டி, நல்லாக் கவனி. இப்போ நான் கேள்வியை ஒண்ணு ஒண்ணாப் படிப்பேன். நீங்க பொறுமையா பதில் சொல்லித் தரணும் தெரியுமா? என்று நிமிர்ந்து பேசிவிட்டு, குனிந்து கேள்வியைப் படிக்கிறாள். பிறகு நிமிர்ந்து பாட்டியைப் பார்க்கிறாள். அவர் சொல்லும் விடையை நோட்டில் எழுதுகிறாள்.

மறுநாள் வகுப்பில் அவள்தான் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியிருந்தாள். மிஸ் அவளைப் பாராட்டினார்.

மீராவின் வளர்ப்பு மகள் அவள் என்று மிஸ் அறிந்திருந்தார். மீராவின் அறிவும், திறமையும் அந்த வட்டாரம் நன்கறியும். எனவே, குழந்தை, மீராவின் உதவியால் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடை எழுதியுள்ளாள் என்று மிஸ் நினைத்துக் கொண்டாள்.

அன்றிரவு மீரா வீட்டிற்கு வந்ததும் வழக்கம்போல் சிறுமியை சாப்பிட்டாயா? பள்ளி சென்றாயா? விளையாடினாயா? என்று பரிவுடன் விசாரித்தாள்.

இப்போதெல்லாம் பாட்டியைப் பற்றிய ஏக்கம் ஏதுமில்லை சிறுமிக்கு. அவர்கள் படம் என்று காணும் ஸ்ரீ அன்னையை அவள் தன் பாட்டியாகவே கண்டு உணர்ந்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். எனவே, எப்போதும் உற்சாகமாய் இருந்தாள்.

ஓ! பள்ளிக்கூடம் போனேன். சாப்பிட்டேன். விளையாடினேன். மிஸ் கொடுத்த கேள்விக்கெல்லாம் சரியான பதில் எழுதினேன்.



மிஸ் கூட இன்று என்னை ரொம்பப் பாராட்டினாங்க என்றாள் உற்சாகம் பொங்க.

எதற்குப் பாராட்டினார்கள்? என்று மேலும் விசாரித்தாள் மீரா.

நேற்று G.K. கிளாஸில் சில கேள்விகள் கொடுத்து வீட்டிலேயே ஆன்ஸர் எழுதி வரச் சொன்னாங்க. நான் மட்டும்தான் எல்லாக் கேள்விகளுக்கும் சரியான விடையெழுதியிருந்தேன் என்று மிஸ் பாராட்டினாங்க என்றாள்.

"அட! அப்படியா? எங்கே உன் நோட்புக்கைக் கொண்டு வா" என்றாள் மீரா ஆவலுடன்.

அவளும் ஆர்வத்துடன் கொண்டுவந்து காட்டினாள். நோட்புக்கைப் பார்வையிட்ட மீரா அசந்து போனாள். ஓரிரு கேள்விகளுக்கு அவளுக்கே விடை தெரியாது. இதெல்லாம் எப்படி இவள் எழுதினாள் என்று வியந்து, மிஸ் எல்லாக் கேள்விகளுக்கும், முன்பே விடை சொல்லிக் கொடுத்துவிட்டார்களா? என்றாள் மீரா.

இல்லையில்லை. இது ஹோம் ஒர்க். வீட்டில் கேட்டுத்தான் எழுதமுடியும். மிஸ் சொல்லமாட்டாங்க! என்றாள்.

பாட்டிதான் எல்லாம் சொல்லித் தருவாங்களே. அவங்ககிட்டே கேட்டுதான் எழுதிப்போனேன் என்றாள்.

மிஸ் இந்த விடைகளெல்லாம் யாரைக் கேட்டு எழுதி வந்தாய்? என்று கேட்கவில்லையா? என்றாள் வியப்புடன்.

ஒன்றும் கேட்கவில்லையே. மீராவின் வளர்ப்பு மகள்தானே நீ? என்று மட்டும் கேட்டார்கள் என்றாள் சிறுமி.

என்ன விந்தை. மிஸ்ஸும் சொல்லித் தரவில்லை, என்னிடமும் கேட்கவில்லை. இவள் ஸ்ரீ அன்னையைத் தன் பாட்டி என்று பூரணமாய் நம்பி அன்பு செய்வது உண்மைதான். ஆனால் இவள்

கூறுவது பகுத்தறிவுவாதத்திற்குப் பொருந்தாதே. பெரிதும் குழம்பினாள்.

*தொடரும்...*

✣✣✣

## சொசைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கிய கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 40 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |

**தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

# துணிக்கடை

அன்பர் தங்கை திருமணத்திற்காகச் சென்னை வந்து ஜவுளி வாங்கினார். தங்க மாளிகையில் நகை வாங்கிவிட்டு அருகிலுள்ள ரெடிமேட் கடையில் சில ரகங்களைப் பார்த்துவிட்டு வாங்காமல் வேறொரு கடையில் வேண்டியதை வாங்கினார்கள். பணம் கொடுக்கப் போனபொழுது பர்ஸ் காணோம் எனத் தெரிந்தது. அக்கடை வாசலில் அமர்ந்து அன்பர் அழுதுவிட்டார்.

கணவனும், மனைவியும் அன்னையை நம்பும் அன்பர்கள். தம் தகப்பனார் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணம் சுமார் 25,000/- இருக்கும். மன வேதனையுடன் பிரார்த்தனை செய்து கொண்டார்கள். கடைக்காரரிடம் தங்கள் சொந்தக்காரர் வீட்டிற்குப் போய் பணம் கொண்டு வருவதாகக் கூறிவிட்டு நங்கநல்லூரிலுள்ள உறவினர் வீட்டிற்கு வந்தனர்.

இரவு முழுவதும் மனம் பர்ஸ் மேலேயே இருந்தது. கிளம்பியதிலிருந்து பர்ஸ் எடுத்ததெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டே வந்தார் அன்பர். ரெடிமேட் கடைக்கு மனம் வந்ததும் ஏதோ மனதில் தட்டுப்பட்டதுபோல வந்தது. போன் செய்து பார்க்கலாம் என போன் செய்தார்.

அந்தக் கடையில் இரு சிப்பந்திகள் அன்னை அன்பர்கள்.

அவர்கள் கடையில் ஒரு பர்ஸ் இருக்கிறது. நேரில் வாருங்கள் என்று கூறினார்கள். கடைக்குப் போனபொழுது சிப்பந்தி, “நீங்கள் ரெடிமேட் பார்க்கும்பொழுது பர்ஸை துணிக்கு அடியில் வைத்துவிட்டுப் போய்விட்டீர்கள். இரவு கடை மூடும்பொழுது துணிகளை அடுக்கினோம், அப்பொழுதுதான் கண்டுபிடித்தோம். பர்ஸைப் பிரித்தால் அன்னை பகவான் படம் கண்ணில் பட்டது. பர்ஸை பத்திரப்படுத்தி விட்டேன்”. பணம் அப்படியேயிருந்தது.

☆ ☆ ☆

# ஆஸ்துமா

ஆஸ்துமாவுள்ளவர்க்கு எந்த வாசனையும் மூச்சுத் திணறும். சமையல் அறை தாளிப்பு, தட்டு நிறைய புஷ்பம், சிறுவர் போட்டுள்ள சென்ட், மகரந்த வாசனை போன்ற எதுவும் ஒத்து வாராது. சாம்பிராணி போடுமிடங்களுக்கு அவர்கள் பல மணி வரை வர முடியாது.

அப்படிப்பட்ட பெண் மையத்திற்குச் சேவைக்கு வந்தார். மையத்தில் அடிக்கடி சாம்பிராணி போடுவது அவருக்குச் சரி வாராது. அந்த நேரம் வெளியில் போய்விடுவார் அல்லது ஓர் அறையில் போய்க் கதவைச் சாத்திக் கொள்வார்.

- அன்னையிடம் வந்தபின் ஓரளவு ஆஸ்துமா குணமாவதுண்டு. அத்துடன் நின்றுவிடும்.
- இப்பெண் அன்னை மூலம் தன் ஆஸ்துமா முழுவதையும் குணப்படுத்த முடியுமா எனக் கருதி, பிரார்த்தனையுடன், தான் விடும் மூச்சே அன்னை ஒளியாக இருக்கும்படி நினைத்துக்கொண்டார்.
- நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது, இப்பொழுது சாம்பிராணி பாதிப்பதில்லை.

எந்தச் சாம்பிராணி அருகே வராமல் விரட்டியதோ, அதே சாம்பிராணியை மையத்தில் போடும் சேவையை அப்பெண்மணி இப்பொழுது செய்கிறார்.

☆ ☆ ☆